கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

24-11-1974

50 காசு



வாழ்க்கை ஒரு கண்டுபிடிப்பு



'க்ளிக்'அடித்துவைப்பீர்-நீங்காத நினைவுக்கே

எப்போதுமே உங்கள் கைபோடிருக்கட்டும், தப்பாதத் துணையான க்ளிக் III.
மின்னலெனத் தோன்றி மறையும், வாழ்வின் அந்த மகோன்னதமான
கணங்களைப் பிடித்துக் காத்திடுவீர், என்றென்றும் நீங்காத நினைவுக்கே.
'குறிவைத்ததும் கப்பென' தப்பாமலே எடுப்பதற்கு ஏற்றது ஆக்பா க்ளிக்.
நடைமுறைக்குகந்தது. உள்ளது உள்ளபடியே எடுப்பது, கையாளச்
சுலபமானது. சிக்கனமானது.

■ 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் 12 பெரிய (6×6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.

■ சிறந்த தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஆகியவை தனியாக விலைக்குக் கிடைக்கும்.

துல்லியமான பிரிண்டுகளையும், என்லார்ஜ்மெண்டுகளையும் பெறுவதற்கே
ஆக்பா-கேவார்ட் போட்டோ தாள்களையே வற்புறுத்திப் பெறுங்கள்.
அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.
ஆக்பா-கேவார்ட் ஏ. ஜி. லீவர்குஷன் அவர்களின் கூட்டுறவோடு
தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.


விலை
ரூ. 70.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).




ஆக்பா க்ளிக்
இந்தியாவின் மிகப்
பிரபலமான காமிரா.

ஏகபோக வினியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
பம்பாய் · புது டெல்லி · கல்கத்தா · சென்னை
புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட்
ஆன்ட்வெர்ப்/லீவர்குஷன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்

SIMOES/AG/32/TM





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 17
நவம்பர் 24, 1974
ஆனந்த, கார்த்திகை 9.

■

சந்தா விவரம்:

உள்நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா,
சென்னை - 600031



அட்டையில்:

ஜல்லிக்கட்டுக் காளைபோல
நிமிர்ந்து நிற்கணும்
சொல்லித் தரும் பாடம்
மட்டும்
பணிந்து கற்கணும்!
- குழந்தையார்

வண்ணப் படம்:
வித்யாஷ்ரதா

விருந்துக்குப் போன கொக்கு மாமா

சி. கீதா

அன்றொரு நாள் திருவாளர் நரியார் தமது பிறந்த நாளைக் கொண்டாடத் தீர்மானித்தார். பிறந்த நாள் விருந்துக்குக் கொக்கு மாமாவை அழைத்தார். அழைப்பை ஏற்றுக் கொண்ட கொக்கு மாமாவுக்கு, மகிழ்ச்சியுடன் கவலையும் உண்டாயிற்று. ஏனெனில் விருந்துக்குச் செல்ல அவரிடம் பூட்ஸ்கள் இல்லை. அருமையான வெள்ளைச் சட்டை, கருப்பு டை, கருப்பு ஹாட், சிவப்புக் கால் உறைகள் இவையெல்லாம் இருந்த போதிலும் கொக்கு மாமாவிடம் பூட்சுகள் இல்லை. அவர் மைனாவிடம் சென்றார். ''அருமை மைனாவே! உன் பூட்சுகளைக் கொஞ்சம் இரவல் கொடுப்பாயா'' என்று கேட்டார்.

''தருகிறேன், கொக்கு மாமா! ஆனால் அவை உங்களுக்குச் சரியாக இருக்குமா?'' என்றது.

மைனாவின் பூட்சுகளைக் கொக்கு அணிய முயன்றது. ஆனால் அதன் பெரிய கால்கள் பூட்சுக்குள் போகவில்லை. அடுத்து நீர்யானையிடம் கொக்கு சென்றது. ''அண்ணா! ஒரு நாளைக்கு உங்கள் பூட்சை இரவல் கொடுங்கள்!'' என்றது.

''அவை உன் கால்களுக்குச் சரியாக இருக்குமா? போட்டுப் பார்!'' என்றது நீர்யானை.

நீர்யானையின் ஒரு பூட்சுக்குள் கொக்கு தன் காலை விட்டது. கால் மட்டுமல்ல, அதன் உடல் முழுவதுமே பூட்சுக்குள் போய் விட்டது! வெளியே வருவதற்குள் மிகவும் சிரமமாகி விட்டது. கொக்கு மிகுந்த சோர்வுடன் ஆந்தையிடம் சென்றது. ''ஆந்தை அண்ணா! பூட்சு இல்லாமல் எப்படிப் பிறந்த நாள் விழாவுக்குச் செல்வது? உங்களிடம் ஏதாவது பூட்ஸ் இருக்கிறதா?'' என்றது.

மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு ஆந்தை பேசியது: ''கொக்கு மாமா! என்னிடம் பூட்சுகள் இல்லை. செருப்புகளே உள்ளன. ஒரு யோசனை சொல்லட்டுமா? சதுப்பு நிலத்துக்குச் செல்லுங்கள். சேறு அதிகம் உள்ள இடத்தில் நாலு மணி நேரம் நில்லுங்கள். உங்களது சிவப்புக் காலுறைகளில் சேறு ஒட்டிக் கொள்ளும். உலர்ந்த பின் அது அழகான பூட்ஸ் போலவே இருக்கும்.''

ஆந்தைக்கு நன்றி கூறிவிட்டு, சதுப்பு நிலத்துக்குப் பறந்து சென்றது கொக்கு. அங்கு வெகு நேரம் நின்று தவம் செய்து விட்டுப் பின்னர் டை முதலியவற்றை அணிந்து கொண்டு, மிக கம்பீரமாக அது நரியாரின் வீட்டுக்குச் சென்றது. அங்கே பிரமாதமாக விருந்து நடந்து கொண்டு இருந்தது. நரியாரை அணுகிய கொக்கு, மிகுந்த மரியாதையுடன், ஓர் உயிருள்ள சுண்டெலியை அதற்குப் பரிசளித்தது. நரியாருக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆனால் கீழே குனிந்து கொக்கின் கால்களைப் பார்த்தபோது அதனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. விருந்துக்கு வந்திருந்த அத்தனை மிருகங்களும் பறவைகளும் கொக்கின் கால்களைப் பார்த்து, ''ஓஹோ!'' என்று சிரித்தன. கொக்கின் அருகில் சென்ற ஆந்தை அண்ணா கூறினார்: ''கொக்கு மாமா! அடுத்த முறை நீங்கள் சதுப்பு நிலத்துக்குச் செல்லும் போது, ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யாதீர்கள்!''

கொக்கு தன் கால்களைக் குனிந்து பார்த்துக் கொண்டது. அதன் ஒரு காலில் தான் ''பூட்ஸ்'' இருந்தது!



பொற்காலம் படைத்த இரும்பு மனிதர்

தம்பி சீனிவாசன்

பாரத நாடு பழம்பெரும் நாடு. ஆனல் பல நூறு கூறுகளாகச் சிதறிய நாடாகவும் இருந்தது. திட்டுத் திட்டாகக் கிடந்த பல சில்லறை சமஸ்தானங்களை யெல்லாம் ஒருங்கிணைத்துப் பாரதத்தை ஒரே தேசமாக்கிய ஒரு பெரும் சரித்திர சாதனை என்ருர் ஜவாஹர்லால் நேரு. அந்தச் சாதனையை நிறைவேற்றிப் பொற்காலம் படைத்தவரே சர்தார் வல்லபபாய் பட்டேல்.

'இரும்பு மனிதர்' என்று மதிப் போடும் மரியாதையோடும் மக்களால் போற்றப்பெற்ற பட்டேலுக்கு இது ஜனன நூற்றண்டு விழா ஆண்டாகும். மகாத்மா காந்தியைப்போலவே இவரும் குஜராத்தில் பிறந்தவர். ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட வீராங்கனை ஜான்ஸி ராணி லட்சுமிபாயுடன் சேர்ந்து போரிட்ட ஒரு வீரரின் மகன் இவர். தந்தையார் ஜாவேர்பாய் யுத்த காலத்தில் 'ஜவான்'; மற்ற நாளில் 'கிஸான்'; அதாவது விவசாயி.

ஆறு குழந்தைகளில் நான்காவதாகப் பிறந்த வல்லபபாயும் இவருக்கு மூத்தவரான விட்டல்பாயும் நண்பர்கள் போல் இணைந்து வளர்ந்தனர். கிராமத்திலே கல்வி. ஆங்கிலப் படிப்பு இல்லை. குஜராத்தி மொழியும் பின்னர் ஸம்ஸ்கிருதமும் கற்ருர். தந்தையுடன் வயலிலே வேலை செய்து, பண்ணைக் கல்வியும் கற்ருர்.

வயலில் வேலை செய்தபடி தந்தையார் பழம் கதைகளைப் பேசுவார். நாட்டை அந்நியர்களிடமிருந்து மீட்பதற்கு முதலில் செய்த முயற்சிகள் பற்றிச் சொல்லுவார். நாட்டிலே ஒற்றுமை இல்லாததால் அந்த முயற்சி தோற்றுவிட்டதென்று தெரிவிப்பார். இளம் வல்லபபாய் மனத்தில் ஆழப் பதிந்த இந்த நாட்டுப் பற்று, பிற்காலத்தில் நாட்டின் சரித்திரத்தைப் பொன் ஏட்டில் எழுத உதவியது!

கண்டிப்பும் நேர்மையும் நிறைந்த தந்தையைப் போலவே இளைஞன் வல்லபனும் வளர்ந்தான். தன் வயதுள்ள சிறுவர்களைத் திரட்டி வேடிக்கை விளையாட்டுக்களுக்கு வழி காட்டுவதில் வல்லவன் வல்லபன். முரட்டுச் சிறுவர்கள்கூட வல்லபரிடம் மரியாதை வைத்திருந்தார்கள்.

உயர் கல்வி வசதி அற்ற கிராமத்தில் வாழ்ந்து படித்தவர் தமது பதினெட்டாம் வயதில்தான் நாடியாத் நகரத்துக்குப் போய் உயர் வகுப்பில் சேர்ந்தார். நான்கு ஆண்டு காலம் ஆழ்ந்து படித்து ஆங்கிலத்தில் வல்லவராகி, மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினர். அப்போதே அவருக்குத் திருமணமாகிவிட்டது!

பள்ளிக்கூட நாளிலேயே அவருக்குத் தேர்தல் வேலையில் ஆர்வம் ஏற்பட்டது. நாடியாத் நகர முனிசிபாலிடி தேர்தலுக்கு அவரது ஆசிரியர் ஒருவர் நின்ருர் எதிர்த்தவர் பெரிய பணக்காரர். ''தோற்ருல் மீசையை எடுத்துவிடுவேன்'' என்று ஜம்பமாகப் பேசினர் அவர். தனது வெற்றியைப் பற்றி அத்தனை உறுதி. பார்த்தார் வல்லபர். தம் ஆசிரியரே வெற்றி பெற வேண்டும் என்று உழைத்தார். மாணவர் படை இதற்காகப் பாடுபட்டது. முடிவு? ஆசிரியரே வென்ருர். ''எங்கே மீசையை எடுத்து விடுங்கள்!'' என்று கோஷமிட்டபடி பணக்காரர் வீட்டுக்கு ஒரு நாவிதரை அழைத்துச் சென்றது மாணவர் கூட்டம்!

இங்கிலாந்துக்குப் போக வேண்டும். அங்கே மேற்படிப்புப் படிக்க வேண்டும்'' என்று முடிவு செய்து கொண்டார்.



இருபத்திரண்டு வயதில். படிப்பு முடிந்தது. பள்ளி ஆசிரியர் ஆகலாம் என்று சிலர் சொன்ன யோசனையை அவர் ஏற்கவில்லை. அரசாங்க வேலையிலும் நாட்டம் கொள்ளவில்லை. சுதந்திரம் நிறைந்ததும், பொருள் சேர்க்க வாய்ப்பும் மிக்க வக்கீல் வேலையே அவரைக் கவர்ந்தது. அவர் தமையனார் விட்டல்பாயும் பம்பாய்க்குச் சென்று வக்கீலுக்குப் பயிற்சி பெற்றவர். ஆறு ஆண்டு படித்தால் நீதித் துறையில் பட்டம் பெறலாம். அதற்கு வசதி இல்லாததால், மாவட்ட வக்கீல் பயிற்சி என்னும் குறுகிய காலப் பயிற்சி பெற்றார் வல்லபர்.

இந்தத் துறையிலும் புத்தகப் படிப்பைவிட, பழகிய வக்கீல்களைப் பார்த்துப் பார்த்தே நிறையக் கற்றார் வல்லபர். மூன்று ஆண்டுப் பயிற்சிக்குப் பின் கோத்ரா என்ற ஊரில் வக்கீல் தொழில் நடத்தினார். எதிரி கட்சியை வாதிலே வெல்லும் வல்லவர் என்று இரண்டு ஆண்டுகளில் புகழ்பெற்றுவிட்டார். அயராது உழைத்தார். எளிமையாக வாழ்ந்தார். மூன்று ஆண்டுகளில் பத்து ஆயிரம் ரூபாய் சேர்த்தார். 'இனி இங்கிலாந்துக்குப் போய்ப் பாரிஸ்டர் படிப்பு படிக்கலாம்' என்று ஆயத்தம் செய்யத் தொடங்கினார். கப்பல் பயணம் ஏற்பாடு செய்பவர்களின் கடிதம் ஒன்று வல்லபருக்குக் கிடைப்பதற்குப் பதிலாக, தமையனார் விட்டலுக்குக் கிடைத்துவிட்டது. அதனால் தம்பியின் ஏற்பாடுகளை அறிந்து தமையனார் மகிழ்ந்தார். ''எனக்கும் இங்கிலாந்து போய்ப் படிக்க ஆசை. இந்தத் தடவை நான் போகிறேன். நான் படித்து வந்த பிறகு நீ போயேன்'' என்றார் தமையன்.

மௌனமாகவும் மகிழ்ச்சியோடும் தியாகம் புரிந்தார் வல்லபர். பிற்காலத்தில் தமது வாழ்வையே நாட்டுக்காக அர்ப்பணித்தவர் அல்லவா ?

தாம் சேரித்த பணத்தைத் தமையனாருக்குக் கொடுத்ததோடு தியாகம் முடியவில்லை. அண்ணியையும் அவர் குடும்பத்தையும் தம் வீட்டில் வைத்து மூன்று ஆண்டுகள் ஆதரித்தார்.

தொடர்ந்து உழைத்து மீண்டும் பொருள் சேர்த்தார். இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். சட்ட மேற்படிப்புப் பெற்றுத் திரும்பினார். அப்போது அவருக்கு வயது முப்பத்தெட்டு!

இங்கிலாந்தில் அவர் நன்கு படித்ததை அறிந்த பம்பாய் பிரதம நீதிபதி வல்லபருக்கு நீதிபதி வேலை தருவதாக முன்வந்தார். வல்லபரின் சுதந்திர இயல்புக்கு அது ஏற்கவில்லை. ஆமதாபாத் சென்று வழக்கறிஞரானார்.

மடமடவென்று தொழில் துறையில் முன்னேறினார். ஆங்கில நீதிபதிகள் வியக்கும் வண்ணம் வழக்கு நடத்தினார். ஆணித்தரமாகக் கேள்வி கேட்டு எதிர்க்கட்சியை மடக்குவார். மாலை நேரங்களில் 'குஜராத் கிளப்' என்னுமிடத்தில் சீட்டாடி உல்லாசமாக ஓய்வு கொள்ளுவார். அதிலும் எப்போதும் வெற்றியே பெறுவார்.

'குஜராத் சபா' என்று முப்பது ஆண்டுகளாக ஆமதாபாத்தில் நடந்து வந்தது ஒரு மன்றம். 1917ம் ஆண்டு அதன் மாநாட்டுக்கு வல்லபரைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தார்கள். காந்திஜியைச் சிறப்பு விருந்தினராக அழைத்தனர். தென் ஆப்பிரிக்காவில் பொதுப் பணி ஆற்றித் திரும்பியவர் என்ற சிறப்புப் பெற்றிருந்தார் காந்திஜி.

இந்த இருவரும் சந்திக்க வாய்ப்பளித்தது அந்த மாநாடு. வல்லபரின் வாழ்க்கை முறையே மாறுவதற்குக் காரணமாயிற்று அந்தச் சந்திப்பு.

ஏழை எளிய மக்களின் நண்பராக விளங்கினார் வல்லபர். அவர்களுக்கு நெருக்கடி வந்தபோது ஏழை மக்கள் வல்லபரையே உதவிக்கு அணுகுவார்கள். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு நில வரி தர இயலாத மக்களுக்கு அரசாங்கம் சலுகை காட்டவில்லை. காந்திஜியின் கட்டளைப்படி வல்லபர் குடியானவர்களை அழைத்து ஒற்றுமையாக சத்தியாக்கிரகம் செய்து சலுகையைப் பெற்றுத் தந்தார். இந்த அறப் போராட்டத்தின்போதுதான் காந்திஜி வல்லபரின் வல்லமையைத் தெரிந்து கொண்டார். தாம் நடத்தும் சுதந்திரப் போரின் தளபதி இவரே என்று தீர்மானித்துக் கொண்டார்.

இரும்பு மனிதருக்கு உள்ளே இளகிய இதயம் இருந்தது. உறுதியான கண்டிப்புத் தலைமையுடனே செயல் திறமை பொருந்தி இருந்தது. மெல்ல மெல்ல வல்லபபாய் பட்டேல் பொதுப் பணிகள் பலவற்றிலும் பொறுப்பேற்க வேண்டி வந்தது. ஏற்ற பொறுப்புக்களை அவர் திறமையாக நிறைவேற்றினார். குஜராத் மாநிலக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக்கப்பட்டார். ஆமதாபாத் நகராட்சியின் தலைவராக அவர் சில ஆண்டுகள் பணி புரிந்தார்.

இவ்வாறு மெல்ல மெல்ல வல்லபரிடம் ஒளிந்திருந்த தலைமைப் பண்புகள் வெளிப்பட்டன. தம் ஊருக்கும் மாநிலத்துக்கும் உழைத்த அவர் நாட்டின் தலைவர்களுள் ஒருவராக ஏற்கப்பெற்றார். நடத்தும் தொழிலுக்கு ஏற்ப ஆடம்பரமாக வாழ்ந்த வல்லபர், காந்திஜியின் நண்பரானதும் மீண்டும் எளிமை

யாக வாழலானார். சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது பிற தொண்டர்களைப் போலவே எளிய குடிலில் தரையிலே படுத்து உறங்குவார். ''இவர் பர்தோலியில் நடத்திய சத்தியாக்கிரகம் பற்றி நாடே வியந்தது. இவரைப் பாராட்டி கல்கத்தா காங்கிரஸில் ஒரு தீர்மானம் நிறைவேறியபோது இவர் எழுந்து நின்று கைகூப்பினார். அவ்வளவே. மாலையோ புகைப்படமோ வேறு பாராட்டோ இல்லை. அவ்வாறு எதிர்பார்ப்பது அன்றைய தொண்டர்களின் வழக்கம் இல்லை'' என்கிறார் ஆசாரிய கிருபளானி. ''சர்தார்'' என்று அப்போது முதல் பாராட்டுப் பெற்ற வல்லபர் பின்னர் காங்கிரஸ் தலைவரானார். சுதந்திரப் போராட்ட நாளில் காங்கிரஸ் தலைவர் என்ற பதவி பெரும் பொறுப்பும் மதிப்பும் பெற்ற பதவி. பகத்சிங் என்ற தேசபக்த இளைஞன் தூக்குத் தண்டனை பெற்ற காலம் அது. நாடே தேசபக்தி எழுச்சியில் இருந்தது. காந்திஜி அப்போது நடத்திய இரண்டு சத்தியாக்கிரகங்களில் ஈடுபட்டு இருமுறை சிறை சென்றார் வல்லபர். ஒவ்வொரு சிறை அனுபவமும் அவர் உடல் நலத்தைப் பாதிக்கும். ஆனால் உள்ளத்து உறுதியை வலுவாக்கும்.

இதற்குப் பிறகு சர்தார் வல்லபபாய் பட்டேலின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளோடு இணைந்தவை.

தமது எழுபத்தைந்தாவது வயதில் அமரரான ஸர்தார் தமது முப்பத்து மூன்று ஆண்டுப் பொது வாழ்வில் சாதித்த சாதனைகளில் என்றென்றும் வாழ்வார். சொல்லைச் சுருக்கிச் செயலைப் பெருக்கிய ஒரு தலைவர் அவர்.

ஓ, அப்படியா!

குரல்: என்ன, அப்படிப் பார்க்கிறாய்? ஏதோ கடல் தாவரம் என்றுதானே?

கிட்டு: ஆமாம்.... கடற் கரையில் இருக்கிறாய். உன் உருவமும் மீன், நண்டு போல இல்லையே என்று...

குரல்: உருவம் மீனைப் போல் இல்லாவிட்டாலும் நானும் மீன்தான். எனக்கு நட்சத்திர மீன் Star Fish என்று பெயர்.

கிட்டு: பொருத்தமான பெயர்தான். உனக்கு ஒன்பது கைகள் போலிருக்கிறதே?

குரல்: ஆமாம், ஐந்து, ஆறு, ஏழு என்று இப்படிக் கைகள் உடையவர்கள் எங்களில் உண்டு. அதுமட்டுமல்ல. என் ஒவ்வொரு கையின் கீழேயும் நூற்றுக் கணக்கான கால்களும் உண்டு. மீன் என்றால் நீந்தும் என்றுதான் நினைப்பாய்? என்னால் கடலுக்கடியில் நடக்கவும் முடியும். அநேகமாக என் வீடு ஆழ் கடலின் அடியில்தான். ஏதோ தப்பித் தவறிக் கரைக்கு வந்து ஒதுங்குவோம்.

கிட்டு: உனக்குக் கண் எங்கே இருக்கிறது?

குரல்: கண்கள் என்று சொல்லு. சிவபிரானுக்கு மூன்று கண்கள். ஆனால் எங்களுக்குப் பல கண்கள். ஒவ்வொரு கைகளின் முனையிலும் ஒவ்வொரு கண் இருக்கும்.

கிட்டு: ஓ, உன் கையின் முனையில் சிகப்பு வட்டுப் போல இருக்கிறதே அதுதான் கண்ணா?

குரல்: ஆமாம். எங்களால் எந்தத் திசையிலும் பார்க்க முடியும். ஒரு திசையில் போக வேண்டுமானால் அந்தப் பக்கமுள்ள கண் எங்களை வழிநடத்திச் செல்லும். வேறு திசைக்குத் திரும்ப வேண்டுமானால் திரும்ப வேண்டிய திசையிலுள்ள கண்ணின் வழி நடப்போம். எங்களில் சில இனத்தின் கால்களுக்கு வாசனையை உணரும் சக்தியும் உண்டு. நாங்கள் உண்ணும் உணவைத் தேடி அடைய அந்த மோப்ப சக்தியுடைய கால்கள் பயன்படுகின்றன. கால்கள் இருப்பதினால் நடந்துதான் தீரவேண்டும் என்பதில்லை. அதன் உதவி இல்லாமலேயும் ஆழ்கடலின் மேலாக எங்களால் வளைய வர முடியும்.

கிட்டு: ஓ, அப்படியா? பல கண்களுடைய அதிசய நட்சத்திர மீனே, உன்னைக் கடலில் தூக்கிப் போட்டுவிட்டு நான் போகிறேன், சரிதானே?

நட்சத்திர மீன்: நானே உன்னை இந்த உதவியைச் செய்யும்படிக் கேட்கலாமென்றிருந்தேன். அப்படியே செய். உனக்கு நன்றி.



சித்தப்பா வந்தார்

சியாமளா

பள்ளியிலிருந்து திரும்பி வந்த கீதா புத்தகப் பையை மேஜையின் மீது வைத்து விட்டு ''அம்மா... அம்மா...'' என்று கூவிக் கொண்டே சமையல் அறைப் பக்கம் ஓடினாள்.

''சொய்ங்....'' என்று காய்ந்த கல்லில் இரண்டு கரண்டி மாவை விட்டு எண்ணெயை ஊற்றிவிட்டுத் திரும்பிய அம்மா ''என்ன கீதா! இன்னைக்கு ரொம்ப 'ஹாப்பியாக இருக்கிறாயே? டெஸ்டில் நிறைய மார்க் வாங்கியிருக்கிறாயா என்ன?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''ஆ... ஆமாம்மா! பத்துக்கு ஒன்பது மார்க் அம்மா. நான்தான் முதல்!'' என்றாள் கரிய விழிகளை அகலமாக்கிக் கொண்டு.

''வெரிகுட்... வெரிகுட்..! அப்படித்தான் வாங்க வேண்டும். கீதா! நானும் உனக்கு ஒரு சந்தோஷச் சமாசாரம் சொல்லப் போகிறேன். நாளைக்கு உன் சித்தப்பா வரப் போகிறார்....'' என்று கூறிவிட்டுத் தட்டில் கீதாவுக்கு டிபனை எடுத்து வைத்தாள். பிறகு ''நீ போய்க் கைகால் கழுவிக்கொண்டு வாம்மா....!'' என்றாள் பெண்ணிடம்.

''அப்பா... அப்பா... சித்தப்பா... எப்படி இருப்பாரப்பா...?'' ஆவலுடன் தந்தையிடம் வினவினாள். தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த அப்பா ''நானே அவனைப் பார்த்து ஐந்தாறு வருஷமாச்சு. அப்ப ஒல்லியா இருந்தான். இப்போ வெளிநாட்டுக்குப் போய்விட்டு வருகிறான். எப்படி இருக்கிறானோ? நாளைக்கு நேரில் பாரேன்!'' என்றார் அப்பா புன்னகையுடன்.

கீதா டிபன் காப்பி சாப்பிட்டுவிட்டு அன்று வந்திருந்த கோகுலத்தைப் படிக்க உட்கார்ந்தாள். கீதாவுக்குப் பன்னிரண்டு வயது நடக்கிறது. இரண்டு மாதங்களில் அவளுக்குப் பதின்மூன்று பிறக்கும். எட்டாவது வகுப்பில் படிக்கிறாள். மிகவும் கெட்டிக்காரப் பெண். ஆனால் மிகவும் சங்கோச சுபாவம் உள்ளவள்.

கோகுலம் படிக்கும் போதே அவளுக்குச் சித்தப்பாவின் நினைவுதான். அவர் எப்படி இருப்பார்? சிவப்பாக இருப்பார் என்று அம்மா சொல்லியிருக்கிறாள். ஆனால் உயரமா, குண்டா? ஒல்லியா, குள்ளமா? தெரியாது.

கீதா ஆறு வயதுச் சிறுமியாக இருக்கும் போது அவள் சித்தப்பா பார்த்திருக்கிறார். இப்போது அவள் வளர்ந்திருக்கிறாள். அப்படித்தானே சித்தப்பாவும் மாறி இருப்பார்? அமெரிக்காவிலிருந்து வருகிறார். எப்படி நாகரிகமாக இருப்பாரோ?

மறு நாள் காலை.

கீதா ''போயிட்டு வரேம்மா....'' என்று ஸ்கூலுக்குக் கிளம்பினாள். அவள் பஸ்ஸில் போக வேண்டும். அன்று பஸ் கிடைக்கத் தாமதமாகிவிட்டதால் சில நிமிஷங்கள் தாமதமாகப் பள்ளிக்கூடத்தில் நுழைந்தாள். பரபரப்புடன் வந்ததில் அவளுக்கு வியர்த்தது. ''ஏன் கீதா! லேட்?'' என்று டீச்சர் வினவினார். ''நான் 'ஆப்சண்ட்' போட்டு விட்டேனே....'' என்றார்.

கீதாவுக்கு அழுகை வரும் போல் இருந்தது. காலையில் இப்படி ஏதாவது தடங்கல் ஏற்பட்டால் மாலையிலும் அவளுக்கு ஏதாவது ஏற்படும். பஸ் கிடைப்பது கஷ்டமாக இருக்கும். அல்லது நடுவழியில் அது 'பிரேக் டவுன்' ஆகிவிடும். அவள் எதையாவது தொலைத்துவிட்டு அப்பாவிடம் திட்டு வாங்கிக் கொள்ளுவாள். 'இன்று என்ன நடக்குமோ...?' சித்தப்பா வரப் போகிறார் என்று சந்தோஷப்படக்கூட முடியாதபடி மனத்தில் ஏதேதோ கலக்கம் ஏற்படுகிறதே? 'ஸ்வாமி, கடவுளே!' என்று வேண்டிக் கொண்டாள் மனத்தில்.

அவள் பயந்தபடியே அன்று மாலை அவள் ஏறிச் சென்ற பஸ் பாதி வழியில் பஞ்சராகி விட்டது. எல்லோரும் இறங்கி வேறொரு பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நின்றார்கள். கீதாவும் புத்தகப் பையுடன் இறங்கி நின்றாள். இன்னொரு பஸ் வந்தது. எல்லோரும் அதில் ஏற ஓடினார்கள்.


''இதிலே ரொம்ப கூட்டம் பாப்பா. அடுத்த பஸ்ஸில் போகலாம்'' என்ற ஒரு குரல் அவளைத் திரும்ப வைத்தது.

கறுத்த மீசையுடன் வாட்டசாட்டமாக ஒருவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். கீதாவுக்குப் பயமாகிவிட்டது. அவனைப் பொருட்படுத்தாமல் அந்தப்

பஸ்ஸில் வேகமாக ஏறிக் கொண்டாள். கூட்டத்தில் இடிபட்டு உள்ளே சென்று கம்பியைப் பிடித்துக்கொண்டவுடன் யாரோ தன்னை நெருக்குவதை உணர்ந்து பின்னால் பார்வையைத் திருப்பினாள்.

'ஐயையோ! அந்த முரடன்தான். அவளைப் பார்த்துச் சிரிக்கிறானே.....!' அவள் பயத்தோடு விலக முயன்றாள். கூட்டத்தில் அது சாத்தியப்படவில்லை.

'' பாப்பா! பையை என்னிடம் கொடு. வழியில் வைத்தால் மற்றவர்களுக்குக் கஷ்டம்'' என்றான் அவன் மெதுவாக. அவள் பதிலே சொல்லவில்லை. சட்டென்று பையை எடுத்துக் கொண்டாள். அவள் மனம் படபடத்தது. ''ஸ்வாமி.... தெய்வமே....!'' என்று அம்மா சொல்லிக் கொடுத்த அனுமான் சுலோகத்தைச் சொல்லிக் கொண்டாள். அப்போது யாரோ சிலர் அந்த ஸ்டாப்பில் இறங்க வழிவிடச் சொல்லவே கீதா எப்படியோ இடித்துப் புகுந்து பெண்கள் பக்கம் சென்று விட்டாள். அங்கு ஓர் அம்மாள் கொஞ்சம் ஒதுங்கி அவளை உட்கார வைத்துக் கொண்டாள். வேறு நாளானால் அவள் அப்படி உட்கார மாட்டாள். வேறு பெரியவர்கள் உட்காரட்டும் என்று தான் நின்று கொண்டு வருவாள். ஆனால் அன்று அவளுக்குப் பயத்தால் உடல் நடுங்க மனமும் படபடக்கவே இங்கு உட்கார்ந்து தன்னைச் சமாளித்துக் , கொள்ள முயன்றாள். பஸ் புறப்படும் சமயம் இலேசாகத் திரும்பிப் பார்த்தாள். அந்த முரடன் அவசர அவசரமாக இறங்கிக் கொண்டிருந்தான். 'அம்மாடி....நல்ல வேளை! இனி பயம் இல்லை. இதோ இன்னும் இரண்டு ஸ்டாப்புகள்தான். பிறகு அவள் இறங்கிவிடலாம்.' கொஞ்ச நேரம் சித்தப்பாவைப் பற்றி நினைக்கலாமே என்று எண்ணினாள். ஆனாலும் அவளுக்கு அந்த முரடனைப் பற்றிய நினைவுதான் வந்தது. ஆள் நல்லாத் தான் இருக்கான். ஆனா... 'அவன் ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கணும் ?





வாடாமலர்!

நம்முடைய கட்சியில் உண்மை யிருக்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள்.

ஆனால் ஒருவரும் உண்மையின் கட்சியில் சேர விரும்புவதில்லை.

—வாட்லி

தாயின் இருதயம்தான் குழந்தையின் பள்ளிக்கூடம்.

—பீச்சர்

ஏன் ஒட்டி ஒட்டி நிக்கணும்? சீ...சீ.... முரடன்.....' அவளுக்கு அவனைப் பற்றி நினைத்தாலே ஆத்திரம் வந்தது.

அவள் இறங்க வேண்டிய இடம் வந்தது. கீதா இறங்கி வீட்டை நோக்கி நடந்தாள். அம்மாவிடம் அந்த முரடனைப் பற்றிச் சொல்லத் துடித்தாள். ஆனால் சித்தப்பா வந்திருப்பாரே! அம்மாவும் அப்பாவும் சந்தோஷமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பார்களே.... இப்ப எப்படிச் சொல்லுவது?

நடந்து கொண்டே வந்தவள் திகைத்து நின்றாள். கொஞ்ச தூரத்தில் ஒரு. கார் நிற்க அதிலிருந்து அவன் —அந்த முரடனேதான் — இறங்கினான். அவன் கையில் இப்போது ஒரு பார்சல் இருந்தது.

'ஐயையோ! இங்கும் வந்துவிட்டானே!' என்று முனகினாள் கீதா. அப்போது அவளைப் போல் ஒரு பெண் வேறொரு பள்ளியில் படிப்பவள், புத்தகப் பையோடு போய்க் கொண்டிருந்தவள், எதிரில் வேகமாக வந்த சைக்கிளுக்காக ஒதுங்கியவள், தடுமாறிக் கீழே விழுந்தாள். அப்போது அந்த முரடன் பாய்ந்து சென்று அந்தப் பெண்ணைத் தூக்கி நிறுத்தி அவளுடைய பையைத் தான் வாங்கிக் கொண்டு அவளைச் சமாதானப்படுத்தியபடி நடப்பதைக் கீதா இமைக்காமல் பார்த்து வியந்தாள்.

'ஓ! அப்ப அவன் நல்லவன்தான் போலிருக்கு.....! எத்தனை ஆதரவா அந்தப் பெண்ணை அழைத்துப் போகிறான்....? இதோ அவள் வீட்டுக்கே போகிறானே!' கீதாவின் உள்ளத்தில் ஆத்திரத்தின் வேகம் தணிந்து அவனிடம் நல்ல எண்ணம் ஏற்பட்டது.

அதனால் பஸ்ஸில் நடந்ததைக்கூட அத்தனை பயத்தோடு நினைத்ததை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டே வேகமாகத் தன் வீட்டை அடைந்தாள்.

வாசலில் அம்மா நின்றிருந்தாள்.

''அம்மா சித்தப்பா வந்துவிட்டாரா அம்மா?'' என்று குதூகலத்துடன் வினவினாள்.

''சித்தப்பா மாம்பலத்துப் பெரியப்பா வீட்டில் இறங்கியிருக்கிறார். இதோ இப்ப இங்கு வந்து விடுவார். சீக்கிரம் நீ போய் முகம் கைகால் கழுவி டிரஸ் மாற்றிக் கொள்'' என்றாள் அம்மா. கீதாவும் உள்ளே ஓடினாள்.

அவள் முகம் கைகால் கழுவிக் கொண்டு வாசலுக்கு வந்தபோது ''கீதா... கீதா.... இதோ உன். சித்தப்பா! வந்து விட்டார்....''. அம்மா சந்தோஷத்துடன் கூவினாள்.

அம்மாவைத் தொடர்ந்து உள்ளே வந்தவரைப் பார்த்துக் கீதா திடுக்கிட்டு நின்றாள்.

'அவனேதான்....! அவன், முரடன் என்று நினைத்தானே அவன் தான் சித்தப்பாவா?''

''அ...அட. நீதானா? நீதான் எங்க கீதுக் குட்டியா?'' என்றார் அவர். அவர் முகத்திலும் வியப்பு. ''மன்னி...! குழந்தை பஸ்ஸில் எப்படி நசுங்கி இடிபட்டு வருகிறாள்?'' என்று பஸ் நிகழ்ச்சியை அவரே விரிவாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ''ரொம்பப் பயந்து விட்டாயாம்மா? கீதா?'' என்று அன்போடு அவளை அணைத்துக் கொண்டான் அந்த முரடன். இல்லை... இல்லை..... அவன் சித்தப்பா!

பார்த்துப்போ!


பார்த்துப் போவாய் ! தெருவிலே
பலதும் செல்லும் ! வேகமாய்
கார்கள் ஓடும்- என்றுமே
கவன மாகச் செல்லுவாய் !

ஓரம் செல்வாய் ! ஊர்திகள்
உறுமி ஓடும் ! லாரிகள்
பாரம் ஏற்றி ஓடிடும் -
பார்த்துக் கொண்டு செல்லுவாய்!

பார்த்துப் போவாய் ! வண்டிகள்
பாய்ந்து ஓடும் ! சைக்கிளும்
ஊர்ந்து பாயும் - ஆகவே
ஓர மாகச் செல்லுவாய் !

நின்று செல்வாய் ! இருபுறம்
நோக்க வேண்டும் ! பாதையில்
ஒன்றும் இல்லை என்றபின்
உடன் கடந்தே செல்லலாம் !

- அழகனூர்



வழிகாட்டி

நான்தான் சாலை வழிகாட்டி
நாளும் இங்கே நிற்கின்றேன்
எங்கே செல்லும் பாதையிது
என்று காட்டி நிற்கின்றேன் !


பயணம் இலக்கை அடையும்வரை
பாதை தவறிட லாகாது !
இவ்வூ ருக்கு இப்பாதை
என்று திசைகள் காட்டுகிறேன் !

முன்னால் போகும் பாதையிது
பின்னால் போகும் பதையிது
எந்தப் பாதை வேண்டுமென
எண்ணித் தேர்ந்து செல்லுங்கள் !

பாதை மாறி வந்தோர்கள்
பலரும் என்னைப் பாருங்கள்
இனிமே லாவது உம்பாதை
எதுவென் றறிந்து செல்லுங்கள் !


செல்ல வேண்டும் என்போர்கள்
சீக்கிரம் விரைந்து செல்லுங்கள்
அல்லர் என்போல் பிறருக்கு
வழியைக் காட்டி நில்லுங்கள் !

- விஜயா ஆண்டான் மைந்தன்





உயிர் காக்கும்



கலாவும் ரவியும் நெடுஞ்சாலையில் கண்மண் தெரியாமல் போட்டி போட்டுக்கொண்டு ஓடினார்கள். அன்றிலிருந்து அவர்களுக்கு விடுமுறை! வீட்டுக்குச் சீக்கிரமாய்ப் போய் ஜாலியாக விளையாட வேண்டும் என்ற ஆசையில் எதையுமே லட்சியம் செய்யாமல் ஓடிக் கொண்டிருந்த அவர்களைத் தடுத்து நிறுத்தியது ஒரு இனிமையான குரல். ''குழந்தைகளே! கொஞ்சம் நில்லுங்கள்!'' என்று.

இருவரும் சற்றே நின்று திரும்பிப் பார்த்தார்கள். பக்கத்திலிருந்த நடைபாதையிலிருந்து இவர்களை நோக்கிப் புன்னகையுடன் நடந்து வந்தாள் ஒரு சிறுமி. அவளுடைய சீருடையும், அவள் அணிந்திருந்த 'பாட்ஜு'ம் அவர்களைக் கவர்ந்தன.

''தெருவில் இப்படித் தலைதெறிக்க ஓடுவது தவறில்லையா? சாலை விதிகளை அறிந்து நடக்க வேண்டாமா? என்று கூறிக் கொண்டே அந்தச் சிறுமி அவர்கள் அருகில் வந்தாள்.

''சாலை விதிகள் அவ்வளவு முக்கியமானவை என்று எனக்குத் தெரியாதே'' என்றாள் ஆறு வயதுக் குழந்தை கலா.

''சாலை விதிகள் ஓரளவு இருப்பதால் தான் விபத்துக்கள் நிகழ்வது குறைந்திருக்கின்றன. அவை இல்லையென்றால் நிமிடத்துக்கு நூறு விபத்துக்கள் நடக்கும். சாலை விதிகள் உனக்குத் தெரியுமா?'' என்று ரவியிடம் கேட்டாள் அந்தச் சிறுமி.

''ம்... எனக்குக் கொஞ்சம் தெரியும். இதோ இந்தப் பலகைகூட சாலை விதியைத்தானே குறிக்கிறது?'' என்று கேட்டான் ரவி.

''இது சாலை விதியின் ஒரு பகுதி. சாலை விதிகள் பல்வேறு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பாதசாரிகளுக்கென்று சில விதிகள், சைக்கிள் ஓட்டுபவர்களுக்கென்று சில விதிகள், இன்னும் மோட்டார், பஸ், லாரி, ஓட்டுபவர்களுக்கு என்று சில விதிகள். இது தவிரப் போக்குவரத்துக் குறிகளும், தானியங்கிச் சிக்னல்களும் உள்ளன. நீ குறிப்பிட்ட, பலகை போக்குவரத்துக் குறிகளில் ஒன்றான 'நில், கவனி, புறப்படு' *(Halt, Listen and Proceed)* என்பதைக் குறிப்பது. ஒவ்வொரு சாலைச் சந்திப்பிலும் நின்று குறுக்கேவேறு வாகனங்கள் வரவில்லை யென்று நிச்சயம் செய்த பின்னர்தான் புறப்பட வேண்டும்''.

''அக்கா! ஒரு சந்தேகம்!'' என்றாள் கலா.


''கேள் சொல்கிறேன்.''


''உங்கள் பெயர் என்ன? இத்தனை விஷயங்கள் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் கலா.


''உங்களை மாதிரி நானும் சின்ன வயசில் இப்படித்தான் தெருவில் ஓடி விஷமம் செய்து கொண்டிருந்தேன். இப்போ நான் படிக்கிற ஸ்கூலில் ''பாது

இந்தப் பக்கத்தின் ஓரங்களில் இருப்பவை சர்வதேச சாலைப் போக்குவரத்து அடையாளங்கள். இந்த அடையாளங்கள் ஒவ்வொன்றும் என்ன சொல்லுகின்றன தெரியுமா? கீழிருந்து மேலாக: (1) வேகக் கட்டுப்பாடு - இருபது மைல்கள். (2) வளைவான பாதை—வலது. (3) இங்கே வாகனங்களை நிறுத்தலாம் (4) பள்ளிக்கூடம். (5) லெவல் கிராஸிங் - பாதுகாக்கப்பட்டது. (6) செங்குத்தான மலைப்பாதை. மேலே: (7) கரடுமுரடான சாலை. (8) கொண்டை ஊசி வளைவு—இடது. (9) வலப் பக்கம் திரும்பு. (10) வலப்பக்கம் சாலை போகிறது. (11) வாகனங்களை முந்திச் செல்லுவது கூடாது. (12) வாகனங்களை நிறுத்தக்கூடாது. (13) பாதை மூடப்பட்டது.











சாலை விதிகள் . லைனீஸ்.

காப்புப் படை'' ஒன்று உள்ளது. இது 'போக்கு வரத்துப் பாதுகாப்புக் குழு' என்றும் சொல்லப்படும். நான் இதில் சேர்ந்ததனுல் போக்கு வரத்து விதிகளைப் பற்றி நன்கு அறிந்து அதன்படி செயல்பட முடிகிறது. மற்றவர்களுக்கும் விளக்க முடிகிறது. என் பெயர்... சுசித்ரா.''

''என் பெயர் ரவி. இவள் கலா. நான் ஆருவது படிக்கிறேன். இவள் இரண்டாம் கிளாஸ்தான். சாலை விதிகளைப் பற்றி எங்களுக்கு விளக்கமாகச் சொல்லுவீர்களா?'' என்று கேட்டான் ரவி.

''நிச்சயம். 'பாதசாரிகள்'னு என்னன்னு உனக்குத் தெரியுமோ ரவி?''

''ஓ! நாம் எல்லாம் பாதசாரிகள்தான். சரியா?''

''ஆம்! ரொம்பசரி முதலில் பாதசாரிகளுக்குண்டான' விதிகளைச் சொல்லி நடை முறையிலும் அதைச் செய்து பார்ப்போம்.''

''எந்தத் தெருவானுலும் சரி, நெடுஞ்சாலையானுலும் சரி, நாம் நடைபாதை மேல்தான் நடக்க வேண்டும். நடைபாதையிலும் கூட ஒருவர் பின் ஒருவராகப் போனுல் சுலபமாகப் போகலாம்.''

''நடை பாதை இல்லை என்ருல்?'' என்ருன் ரவி.


''நடை பாதை இல்லாத இடங்களில் நாம் தெருவின் வலதுபுற ஓரத்தில் போக வேண்டும். அப்போதுதான் நமக்கு முன் வரும் வாகனங்களை நாம் கவனமாகப் பார்த்து ஒதுங்கிக்கொள்ள முடியும்.''

''நடைபாதை இருக்கும் இடத்தில் தெருவின் வலப்புற நடைபாதையில் செல்வது நல்லது. கலா இப்போ நாம் தெருவின் அந்தப் பக்கத்துக்குச் செல்ல வேண்டும். எப்படிப் போவாய்?''

''அப்படியே... குறுக்கே கார் வர்ரதுக்கு முன்னுலே சர்ச்...சுன்னு ஓடியே போயிடுவேன்'' என்ருள் கலா.


''அது தப்பும்மா! தெருவைக் கடக்கிறதுன்னு ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். சாதாரண நாட்களைவிட மழைக் காலத்தில் இன்னும் ஜாக்கிரதையாக இருக்கணும். இல்லேன்னு வழுக்கும். சாதாரணத் தெருவைக் கடக்கறது ரொம்பச் சுலபம். இப்படியும் அப்படியும் பார்த்துட்டு ஏதும் வாகனங்கள் வர்லேன்னு உடனே குறுக்கே நடக்கலாம். இந்த மாதிரி நெடுஞ்சாலைகளில் அதோ போட்டிருக்கே அந்தக் குறுக்குக் கோட்டுக்குள் தான் நாம் தெருவைக் கடக்க வேண்டும். இதற்குப் பெயர் ''பெடஸ்ட்ரியன் கிராஸிங்''. அதாவது பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கான பகுதி என்று பெயர். சில இடங்களில் போலீஸ்காரர் இருந்து நாம் தெருவைக் கடக்க உதவி செய்வார். இன்னும் சில இடங்களில் தானியங்கி விளக்குக் கம்பங்கள் நமக்கு வழிகாட்டும். சில 'பெடஸ்ட்ரியன் கிராஸிங்'குகளில் 'போக்கு வரத்துத் திடல்' என்று நெடுஞ்சாலையின் மத்தியில் இருக்கும். முதலில் ஒரு பாதிச் சாலையைக் கடந்த பின் மீதிச் சாலையை அங்கிருந்து கடக்

கீழே: (1) பார வண்டிகள் போகக்கூடாது. மேலே: (2) குறி காட்டும் பக்கமாகப் போகலாம். (3) வேகக் கட்டுப்பாடு முடியும் எல்லை. (4) ஒலி எழுப்பக்கூடாது. (5) இடப்பக்கம் சாலை போகிறது. (6) இடப்பக்கம் திரும்பு. (7) கொண்டை ஊசி வளைவு—வலது. (8) வளைவான பாதை-இடது. (9) இரு சாலைகள் குறுக்கிடுகின்றன. (10) படகுத்துறை. (11) பாதுகாப்பில்லாத லெவல் க்ராஸிங். (12) சாலை முடிகிறது. (13) குறுகலான பாலம். கீழே வலது: மிகக் குறைவான வேகத்தில் போ. நெடுஞ்சாலை வருகிறது.









கலாம். இங்கே 'சிக்னல்' விளக்குத் தான் வழிகாட்டி. அதோ! பச்சை விளக்கு எரிகிறது. இப்போது நாம் பயமின்றித் தெருவைக் கடக்கலாம் என்பதற்கு இது அறிகுறி. இதில் சிவப்பு விளக்கு எரிந்தால் நாம் தெருவின் குறுக்கே செல்லக் கூடாது.''

'' சுசித்ராக்கா! போலீஸ் மாமாவோ அல்லது இந்த விளக்கோ இல்லேன்னு எப்படி நாம் 'வீதியைக் கடப்பது?'

'' பொதுவாக வாகன மோட்டிகள் இந்தக் கோடுகள் இருக்கும் இடங்களில் எல்லாம் வேகத்தைக் குறைக்கவோ, அவசியமானால் நிறுத்திச் செல்லவோ கடமைப்பட்டவர்கள். முன் ஜாக்கிரதையாக நாமே முதலில் வலது புறமும் பின்பு இடது புறமும் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் பார்த்து தெருவின் குறுக்கே கடக்க வேண்டும். இப்படிக் கடக்கும்போது ஓடக் கூடாது. பயத்தினால் கீழே விழ நேரிடலாம். நிதானமாக அதே சமயம், ஜாக்கிரதையாக நேரே செல்வோமானால் அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.''


''இன்னும் சில நெடுஞ்சாலைகளில், சுரங்கப் பாதைகளும், மேம்பாலங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவை இருக்கும் இடங்களில் இவற்றைத் தவிர வேறு வழியில் தெருவைக் கடப்பது தவறு மட்டுமல்ல குற்றமுமாகும்.''


''தெருவைக் கடக்க வேறு ஏதாவது விதிகள் உண்டா?''— இது ரவி.


''இருக்கு! நின்று கொண்டிருக்கும் எந்த வாகனத்தின் முன்னாலோ பின்னாலோ தெருவைக் கடந்து செல்வது அபாயம் விளைவிக்கக் கூடியது. திடீரென்று அந்த வாகனம் கிளம்பி விடலாம். அல்லது அந்த வாகனத்தைத் தாண்டிச் செல்லும் வேறு வண்டியினாலும் நமக்கு ஆபத்து நேரிடலாம்.''

''காலை வலிக்குது அக்கா! பஸ்ஸில் போகலாமா?'' என்று மெதுவாகக் கேட்டான் கலா.

''அதுவும் நல்லதுதான். பஸ்ஸில் போய்க் கொண்டே அதில் பிரயாணம் செய்ய நேரிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைச் சொல்லுவேன்.''







வாகனப் போக்கு வரத்தைக் கட்டுப் படுத்தும் (சிக்னல்) தானியங்கி ஒளி அமைப்புகள்.

அவர்களைக் கடந்து வேகமாக ஒரு பஸ் சென்று கொண்டிருந்தது. அதன்படிகளிலும், கம்பிகளிலும் தொங்கியபடியே சிலர் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். பின்னால் வந்த பஸ்ஸில் மூவரும் ஏறிக் கொண்டனர்.

'' சுசித்ராக்கா ! இந்த மாதிரிப் படியில் நின்றுகொண்டு பஸ்ஸில் போகணும்னு ரொம்ப நாளா எனக்கு ஆசை'' என்றான் ரவி.

''ரவி! சென்னையில் ஏற்படும் பெரும்பாலான விபத்துக்கள் ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே விழுவதனால்தான் ஏற்படுகின்றன. பஸ்ஸின் படிகளில் நின்று கொண்டோ, கம்பிகளில் தொங்கிக்கொண்டோ செல்வது நம் உயிருக்கே ஆபத்தாக முடியும். பக்கவாட்டில் வரும் வாகனங்களினால் நாம் மோதப் படலாம். அல்லது பிடி நழுவிக் கீழே விழுவதால் பஸ்ஸின் சக்கரங்களில் சிக்கி உயிரிழக்க நேரிடலாம். இதே போல ஓடும் பஸ்ஸிலிருந்து ஏறவோ இறங்கவோ முயற்சி செய்தால் கீழே விழுந்து, அதுவே பேராபத்தாக முடியும். சாலையின் நடுவில் 'சிக்ன'லுக்காக பஸ் நிற்கும் போதும் ஏறவோ இறங்வோ கூடாது.''

''நாம் இறங்க வேண்டிய 'ஸ்டாப்' வந்தாச்சு அக்கா!'' என்றான் ரவி. மூவரும் பஸ்ஸிலிருந்து இறங்கினர்.

''எப்படிக் கண்டு பிடிச்சே? குழந்தைகள் போக்கு வரத்துப் பூங்காவுக்கு முன்பே வந்திருக்கிறாய் போலிருக்கு!''

''போக்கு வரத்துப் பூங்காவா?'' இருவரும் ஏககாலத்தில் கேட்டனர்.

'' ஆம்! போக்கு வரத்துப் பூங்காவுக்குச் சென்று போக்கு வரத்துக் குறிகளைப் பற்றி விளக்க வேண்டும் என்று தான் இந்த பஸ்ஸில் உங்களை அழைத்து வந்தேன். இந்தப் பூங்கா 1965ம் வருஷம் சென்னை அரசாங்கத்துக்கு பர்மாஷெல் எண்ணைக் கம்பெனியினரால் கொடுக்கப் பட்ட நன்கொடை. உதவிக் கமிஷனர் அலுவலகத்தின் முன் இது அமைந்திருப்பது மிகவும் பொருத்தம். வாருங்கள் உள்ளே போகலாம்.''

மூவரும் உள்ளே சென்றார்கள். பூங்காவில் சிறு சிறு சாலைகளும், சாலைப் போக்கு வரத்து விளக்கக் குறிகளும், தானியங்கி விளக்குகளும் இருந்தன.

சுசித்ரா தொடர்ந்தாள்: "இந்தப் பூங்காவில் உங்களைப் போன்ற குழந்தைகளுக்குப் போக்கு வரத்து விதிகள் பற்றிய பயிற்சிகளையும், அவற்றைக் கடைப் பிடிக்கும் முறைகளையும் விளக்கமாகச் சொல்லிக் கொடுப்பார்கள்."

"எங்களுக்கு இப்போ அவர்கள் சொல்லிக் கொடுப்பார்களா சுசித்ரா அக்கா?" என்றாள் கலா.

"நானும் சொல்லிக் கொடுக்கிறேன். அவர்களும் சொல்லிக் கொடுப்பார்கள். அதோ! நீங்கள் அந்தச் சின்னக் கார்களில் போய் உட்கார்ந்து கொண்டு ஓட்டுங்கள் பார்க்கலாம்."

காலால் 'பெடல்' செய்யக் கூடிய சிறிய கார்களில் ரவியும், கலாவும் போய் தனித் தனியே உட்கார்ந்து கொண்டார்கள்.

"கார், ஸ்கூட்டர், பஸ் முதலியன ஓட்டுவதானால் முக்கியமான சைகைகளைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். காரில் உட்கார்ந்து கிளம்புவதற்கு முன்னால், தெருவில் வேறு வாகனம் சமீபத்தில் வலது பக்கத்தில் வருகிறதா என்று பார்த்துவிட்டுக் கிளம்ப வேண்டும். இப்படிச் செய்யும்போது பின்னாலிருந்து வேகமாக வரும் வண்டியுடன் மோதுவது தவிர்க்கப்படுகிறது."

கலாவும் ரவியும் பக்கவாட்டில் பார்த்து விட்டுத் தத்தம் கார்களைக் கிளப்பினர்.

"இதோ இது ஒரு பெடஸ்ட்ரியன் கிராஸிங். ஆகவே இங்கு வேகத்தைக் குறைத்து, அவசியமானால் நிறுத்தவும் செய்ய வேண்டும். மேலும் தானியங்கி விளக்குகளோ அல்லது போக்கு வரத்துப் போலீஸோ இல்லாத இடங்களில் நின்று, கவனித்துச் செல்ல வேண்டும்.

"வலது பக்கமோ இடது பக்கமோ திரும்புவதானால் வலது கையை நேராகக் காட்டி வலது பக்கம் என்றும், வலது கையை அப்பிரதட்சணமாகச் சுழற்றி இடது பக்கத்துக்குத் திரும்பப் போகிறேன் என்றும், சைகை செய்ய வேண்டும்."

"தெருவின் இடது பக்கமாகச் செல்ல வேண்டும் கலா! ஒரு வாகனத்தை முந்திச் செல்வதானால் அதற்கு வலப்புறமாக மட்டுமே முந்திச் செல்ல வேண்டும். ரவி, உன்னை முந்திச் செல்ல ஆசைப்படுகிறான் என்று அவன் 'ஹார்ன்' அடிப்பதிலிருந்து தெரிகிறது. வலது கையை முன்னும் பின்னும் அசைத்து அவனுக்கு வழி கொடு.

கலாவை முந்திக் கொண்டு வேகமாக வண்டியைக் கிளப்பினான் ரவி.

"ரவி! இங்கும் சரி, சாலையிலும் சரி. வேக எல்லையை மீறக் கூடாது. அதற்காகக் கலாவின் காரின்மேல் இடிக்கிற மாதிரி மெதுவாகப் போகாதே! வண்டியை நிறுத்தும்போது வலது கையை மேல் நோக்கிக் காட்டி 'நிறுத்தப் போகிறேன்' என்ற சைகையைச் செய்.

"அக்கா! வண்டியை எங்கெங்கு நிறுத்தக் கூடாது?" — இது ரவி.

"தெரு முனைகளிலும், பாதசாரிகள் பாதையிலும், பஸ் நிறுத்தங்களின் அருகிலும், தெருவின் வலப்புறத்திலும் வண்டிகளை நிறுத்தக் கூடாது. 'நோ பார்க்கிங்' என்று எங்கே 'போர்டு' இருக்கிறதோ அங்கு வண்டியைக் கண்டிப்பாக நிறுத்தக் கூடாது." என்றார் போக்குவரத்துப் பூங்காவின் அதிகாரி.

"அக்கா எங்கே?" இருவரும் ஒரே சமயத்தில் கூவினார்கள்.

"அதோ, அங்கே! அதுவரை விதிகளைக் கடைப்பிடித்து ஓட்டுங்கள் பார்க்கலாம்" என்றார் அதிகாரி.

பூங்காவிலிருந்த போக்கு வரத்துக் குறிகளைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொண்ட கலாவும் ரவியும், சுசித்ராவுடன் கிளம்பினர்.


"அக்கா! சைக்கிளில் வரும்போது, கவனிக்க வேண்டிய விதிகள் பற்றிச் சொல்றேன்னீங்களே!" என்றான் ரவி.

"காருக்கு உண்டான எல்லா விதிகளும் சைக்கிளுக்கும் பொருந்தும். கார் லைட் பற்றிச்சொல்ல மறந்து விட்டேன். இரவு நேரத்தில் காரிலும் மற்ற எல்லா வாகனங்களிலும் விளக்குகளுடன்தான் செல்ல வேண்டும். சைக்கிளில் டபிள்ஸ் செல்லக் கூடாது. வேகமாக அல்லது மெதுவாக ஓடும் வாகனங்களைத் தொற்றிப் பிடித்துக் கொண்டு ஓட்டக்கூடாது அதே போலத் தெருவில் கைகளை விட்டு விட்டுச் சர்க்கஸ் வித்தை செய்யக் கூடாது. பத்து வயதுக்குள் இருக்கும் சிறுவர்கள் சைக்கிள் ஓட்டவே கூடாது. போதுமா?" என்றாள் சுசித்ரா.

"இதோ எங்க வீடு வந்தாச்சு அக்கா!" என்றனர் இருவரும்.

"எனக்கும் நேரமாகி விட்டது. இன்னொரு நாள் வீட்டுக்குள் வருகிறேன். நீங்கள் பத்திரமாக வீட்டுக்குப் போய் விடுங்கள்." என்று கூறிய சுசித்ரா, நடை பாதையின் மேல் மெதுவாக நடந்து சென்றாள்.


"ரொம்ப நன்றி அக்கா!" என்று கூறியபடியே சுசித்ரா தெரு முனையில் சென்று திரும்பும்வரை நின்று பின்னர் வீட்டுக்குள் நுழைந்தனர் ரவியும் கலாவும்.


ஜம்புமாலியுடன் மல்யுத்தம் செய்தார் ஹனுமார்.
ஜெய் ஹனுமான் 25
கதை: ரா. கணபதி சித்திரம்: விஜய
ஜம்புமாலி மாருதியின் மார்பில்
ஆயுதத்தை ஏவ, அதனால் ரோஷம் கொண்ட ஹனுமார் அவன் தேர்மீது குதித்து....
அகம்பன் என்ற சேனாபதி மாருதியின் உடலை பாணங்களால் துளைத்தான்.
ரத்தத்தில் நனைந்த உடலோடு ஹனுமார் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி அகம்பன் மீது அடித்து அவனைக் கொன்றார்.
ஜெய் ஹனுமான்! மாருதி வாழ்க! வாழ்க....!
அஞ்சனை மைந்தா, உன் அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டுகிறேன்.
எல்லாம் தங்கள் அருள்தான் அண்ணலே!


போருக்கு வந்த ராவணனோடு லக்ஷ்மணன் மோத, ராவணன் சக்தி ஆயுதத்தை லக்ஷ்மணன் மீது பிரயோகிக்கிறான்.
ராவணா! ராகவனால் மாள வேண்டியவன் நீ. அதனால் உன்னை நான் கொல்லப் போவதில்லை. இருப்பினும் என் சக்தியைக் கொஞ்சம் அறிந்து கொள். இதோ பார்....
ஹனுமாரின் அடியில் நிலை குலைந்து போகும் ராவணன்.
ஏ, வானரமே! உன் பராக்கிரமத்தை மெச்சினேன்.
என்னை நீ புகழ்ந்து பேசுமளவுக்கு உன்னை நினைவோடு வைத்திருக்கும் நானும் ஒரு வீரனா?
ஆக்ரோஷத்துடன் மாருதியின் மார்பில் ராவணன் குத்தினான். அதனால் பொறி கலங்கிய ஹனுமார் களைத்துத் தரையில் உட்கார்ந்து விடுகிறார்.
தொடரும்

சிரிக்கச் சிரிக்க..!






டாக்டர்: ஏன், முனியா ஏன் வெறு மனே தலையைச் சொறிந்து கொண்டு வந்து நிக்கறே? ஒரு அமிண்ட் மெண்ட் தரேன் தலையில் தட விக்கோ.

முனியன்: தீபாவளி இருந்துக் காகத்தான் தலையைச் சொறியறேன்.


டாக்டர்: இப்ப அமிண்ட்மெண்ட் தான் தரமுடியும். இதிலே, அரியா கல்யாண இறும். நிறும் எல்லாம் பார்க்கலாம்.



"ஒண்ணும் வேண்டாம், ஒத்தை வெடி வாங்கித் தந்தாப் போதும்னு குழந்தைகள் கேட்டா, அதுக்காக ஒரே ஒரு வெடியை வாங்கிக்கொடுத்து இப்படியா குழந்தைகளை அழ விடறது?"



"விக்கிற விலையில் ஒரே கம்பி மத்தாப்புதான் வாங்க முடிந்தது. பிடிக்கறவாளெல்லாம் வந்து பிடிக்கலாம்."






"என்னடா வெடிச்சுது?"

"பயந்து போனீங்களா? கார் டயர் வெடிச்ச சத்தம்தான் அது!"

"அப்பாடா! பட்டாஸ் விக்கிற விலையிலே நீங்கதான் எதையாவது வாங்கி வெடிச்சிங்களோன்னு பயந்தேன்."

"கேப் வெடிக்கத் துப்பாக்கி வாங்கித் தரலேயாம். அதனுலே புது ஐடியாப் பண்ணி இருக்கான் பாரு!"



"ஒன்னுங்களால் ஆட்டம்பாம் வாங்கிண்டு வந்திருக்கேன். யாருக்கும் அதனுல் ஆபத்தில்லே. குழந்தை கூடக் கொளுத்தலாம்..."


"எப்படி?"


"கொளுத்தினுல் அது வெடிக்காது!"




"உங்க பையன் காலேஜ் முடிஞ்சு வந்ததும் என்னவாகப் போறுன்?"


"அவன் போற போக்கைப் பார்த்தால் வயதானவனுக ஆகப் போறுன்னுதான் தோணுது!"







8
பலே பாலுவும் பாட்டில் பூதமும்.
கதை: வாண்டு — சித்திரம்: செல்லம்
என்னடா, நான் தனியே வருவேன் என்னைத் தாக்கலாம்னு காத்துக் கிட்டிருக்கீங்களா? வா...வா...வா! இதை வாங்கிக்குங்க...
வீட்டுக்குப் போன பாலுவை அவன் அம்மா ஸ்டேஷனுக்கு விரட்டினாள். ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தரான மாமா தாத்தாவை வரவேற்க.
சுத்த சிடுமூஞ்சின்னு இந்தத் தாத்தா. எப்பவும் எதிலும் குற்றமும் குறையும் சொல்லும் முசுடாயிற்றே....
பாலுவின் விரோதிகள் அவனைப் பழிவாங்கக் காத்திருந்தனர் ஸ்டேஷனுக்கு வெளியே. மிதியடி விரிப்பின் மீது அவர்கள் வந்த போது...
ஏண்டா பாலு உனக்கு ஒரு வேலைக்காரனா? உன் குறும்புத்தனம் எல்லாம் மாறல்லியே.
பாலுவின் விரோதிகள் விரிப்பைப் பிடித்து இழுக்கவே தாத்தாவும் பாலுவும் தலை குப்புற....
ஆ! பிரபுவே....
முசுடு தாத்தாவுக்கு மூக்குக்கு மேலே கோபம். ஷோ கை வண்டியில் அவர் "லக்கேஜ்களை" ஏற்றியபடி வெளியே வரும்போது அங்கும் பாலுவின் விரோதிகள் காத்திருந்தனர்.
இந்த அழுகல் தக்காளியும்,குப்பையும் பாலுவின் முகத்தை அழகு படுத்தும்.
பெட்டிக்குள் ஏதாவது சாமான் உடைந்திருந்தால் உன்னை லேசில்
பாலுவுக்கு வைத்த குறி தாத்தாவைத் தாக்குறது. பாலுவும் ஷேர்தியும் குனிந்து கொள்ளுகின்றனர்.
டேய் பாலு இந்தா வாங்கிக்கோ!



உங்களால் என்பிரு
வுக்கு அவர் தாத்தா
விடம் கெட்ட பேர்.
கைவண்டி தாத்தா
வோடு இறக்கத்
தில் ஓடுகிறது.
பாய்ச்சலையும் காட்டு...ம்
ஏய்... ஏய்... ய்...
போச்சு... போ...
கொண்ட காளை ஊர்க்க
மாகப் பாய்கிறது.
அதோ
ஓடுகிறது
வண்டி. என்
தலைப்பாகை
யை வீசி....
வண்டியின் ஓட்டத்தை
நிறுத்திவிட்டேன்... ஆனால்
பெரியவர்? ஐயோ....
இத்தனை மோசமான வரவேற்
புக்கிடைக்குமென்று தெரிந்திருந்
தால் நான் வந்தே இருக்க மாட்
டேன். நான் இங்கு தங்கப்
போவதில்லை வருகிறேன்.
தங்கினாலும் எங்களால்
தாங்க முடியாது.
போவதே நல்லது.
தொடரும்



டிவிஎஸ் தொகுப்பைச்
சேர்ந்த ஸதர்ன் ரோட்வேஸ்
நிறுவனத்தைத் தவிர
வேறு எந்த லாரி சர்விஸில்

- லாரிகள் தினமும் 77,849 கி.மீ. ஓடுகின்றன? தென்னகமெங்கும் 575 கிளைகள் உள்ளன?
- பார்சல்கள் பழுதடையாமல் தாமதமின்றிப் போய்ச் சேர இரு இடங்களுக்கிடையே நேரிடையான பார்சல் சர்விஸ் உள்ளது?
- லாரிகள் செல்லும் வழியெல்லாம் பழுது பார்க்கப் பட்டறைகள் உள்ளன?
- பார்சல்களின் அளவு எதுவாக இருந்தாலும், ஒரே மாதிரியான அக்கறை எடுத்துக் கொள்ளப்படுகிறது?
- பார்சல்கள் நடுவழியில் களவு போகாமல் இருக்கின்றன?
- குறித்த நேரத்திலும், பத்திரமாகவும், ஒழுங்காகவும், நம்பிக்கைக்குகந்த வகையிலும் பார்சல்களைக் கொண்டு சேர்க்கும் 60 ஆண்டின் புகழ் நிறைந்த சேவை உங்களுக்குக் கிடைக்கிறது?


நடு இணையற்றவர்களிடமே உங்கள் பார்சல்களை ஒப்படையுங்கள்.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

FDS SR 1977 TMA



தெரியுமா?

1483. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா தோன்றியது எப்போது?

1484. கூட்டுறவுச் சங்கங்களின் (கோவாபரேடிவ்) தோற்றம் இந்தியாவில் எப்போது ஏற்பட்டது?

1485. கப்பல் கட்டும் தொழில் இந்தியாவில் தொடங்கியது எப்போது?

1486. ஒரு காலத்தில் மாஸ்கோ நகரை ஸெயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்று அழைத்தார்களாமே?

1487. ஸ்பெயின் தேசத்துக்கு உரிமையான தீவுகளைக் கூற முடியுமா உங்களால்?

1488. யாங்ட்ஸி நதி எந்த நாட்டில் ஓடுகிறது?

1489. பசிபிக் பெருங்கடலுக்கு அப்பெயரைச் சூட்டியது யார்?

1490. கில்டர் என்ற நாணயம் எந்த நாட்டில் புழக்கத்தில் உள்ளது?

1491. தோரியம் உலகில் எங்கு ஏராளமாக உள்ளது?

1492. தாய்வான் நாட்டின் தலை நகரம் எது?

1493. இந்துமகா சமுத்திரத்தில் மிக ஆழமான பகுதி எது? ஆழம் எவ்வளவு?

1494. கல்கத்தா நகரம் தோன்றியது எப்போது?

1495. உலகில் பார்லிமெண்டரி ஜனநாயகத்தை நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வரும் தேசம் எது?

1496. நாம் கடைப்பிடிக்கும் தேசிய காலண்டரின் பெயர் என்ன?

1497. கடுமையான பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட தேசம் என்று சரித்திரங்களில் குறிக்கப்படுவது எது?

1498. கிராண்டு டிரங்க் ரோடு (Grand Trunk Road) என்ற தேசிய நெடுஞ்சாலையை உருவாக்கியவர் யார்?

1499. பத்ம விபூஷண் விருதை 1972ம் ஆண்டில் பெற்ற விஞ்ஞானி யார் தெரியுமா?

1500. எலாஸ்டிக், பிளாஸ்டிக் இவற்றுக்குள்ள வித்தியாசம் என்ன?

1501. எந்த ஒரு நிலையில் பறவை இறகு, இரும்பு இரண்டும் ஒரே மாதிரி வேகத்தில் விழும்?

1502. வெடி மருந்தைப் பற்றி முதலில் அறிந்தவர்கள் சீனர்கள்தான் என்றாலும் மேற்கத்திய நாகரிகத்தில் வெடி மருந்து கண்டுபிடிப்புக்கான புகழ் யாருக்குப் போகிறது என்று தெரியுமா?

1503. லாகரித்மிக் (Lagarithmic) வாய்ப்பாட்டை முதன் முதலில் தொகுத்தது யார் தெரியுமா?

1504. டோக்கியோவில் நடைபெற்ற 1964 ஒலிம்பிக்கில் இந்திய ஹாக்கிக் குழு தங்கப் பதக்கத்தைப் பெற்றது. அப்போது இக் குழுவின் காப்டனாக இருந்தவர் யார் தெரியுமா?

1505. பாரதத்தின் தேசிய ஹாக்கி டோர்னமெண்டுக்கான டிராஃபிக்கு என்ன பெயர் என்று தெரியுமா?

1506. இந்தியாவின் மிகப் பழைமையான சாசர் (Soccer) டோர்னமெண்டின் பெயர் என்ன?

1507. பாக் ஜலசந்தியை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் யார்?

தெரியுமே!

விடைகள்: 1483: இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியாவின் இடத்தில் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா தோன்றியது 1955 முதல். 1484. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரேயே 1941ல். 1485. விசாகப்பட்டினத்தில்-1941ல். 1486. தவறு. லெனின்கிராட் நகரம்தான் அப்படி அழைக்கப்பட்டது. 1487. மெஜோர்கா, மினோர்கா, இபிஸா (பாலரிக் தீவுகள்) ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் உள்ள கானரித் தீவுகள். 1488. சீனாவில். 1489. பெர்டினண்ட் மெக்கல்லன். 1490. நெதர்லாந்தில். 1491. நம் கேரளாவில். 1492. தாய்பே (Taipai) 1493. ஜாவா டிரெஞ்ச் என்ற இடம் 7725 மீட்டர்கள். 1494. 1690ல் பிரிட்டிஷாரால். 1495. கிரேட் பிரிட்டன். 1496. விக்ரம சகாப்தம் (சாகா எரா) 1497. இந்தியா 1770ல் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இறந்து போனார்கள் பஞ்சத்தினால். 1498. 1540-1545ல் பாரதத்தை ஆட்சி புரிந்த ஷெர்ஷாவினால் 1499. டாக்டர் விக்ரம் சாராபாய். 1500. இழுத்து விட்டதும் தனது பழைய உருவத்துக்கு வரக் கூடியது எலாஸ்டிக். அப்படி வராதது பிளாஸ்டிக். 1501. சூனியப் பிரதேசத்தில். 1502. ரோஜர் பேகன் (Roger Bacon) என்பவருக்கு. இதற்காக இவரைச் சூனியக்காரர் என்று பத்தாண்டு காலம் சிறையில் தள்ளினார்கள். 1503. 1614ல் ஜான் நேப்பியர் என்பவர். 1504. சரண்ஜித் சிங். 1505. ரங்கசாமி கப். 1506. டூராண்ட் (Durand) முன்பு சிம்லாவில் நடைபெற்றது. இப்போது டெல்லியில் நடைபெறுகிறது. 1507. மிஹிர்சென்-1966. ஏப்ரல் 5ல் 25 மணி 36 நிமிஷங்களில் நீந்திக் கடந்தார்.



மந்திரக் கம்பளம் 16

வாண்டுமாமா

இளவரசன் கீர்த்திவர்மனின் வரவினால் மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள் குந்தளவல்லியைத் தவிர வேறு யாராவது இருக்க முடியுமா? இருவரும் நந்தவனத்துக்குச் சென்றார்கள். குந்தளவல்லியுடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழத் துடித்துக் கொண்டிருந்தான், கீர்த்தி. நந்தவனத்தின் மையப் பகுதியில் மெத்தென்ற பசும்புல் வெளி. அழுத்தமான பச்சைக் கம்பளத்தை விரித்தது போல் இருந்தது. அதன் நடுவே ஓங்கி வளர்ந்த ஒரு சரக்கொன்றை மரம். சரக்கொன்றையின் பூக்களைப் பார்த்திருக்கிறீர்களா ?.... பொன்னை உருக்கிக் காசுகளாகவும் மணிகளாகவும் வார்த்துக் கோத்துக் கட்டித் தொங்கவிட்டாற் போல மரம் முழுவதும் சரம் சரமாகப் பூத்துக் குலுங்கும். மஞ்சள் நிறப் பூக்கள். மரகதக் கம்பளம் போன்ற புல்தரையில், பொற்காசுகள் போன்ற சரக்கொன்றை மலர்த் தூவலின் மீது போய் இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் கீர்த்தி கூறினான். ''இன்னும் மூன்றே நாட்கள்தான். நான் திட்டமிட்டபடி எல்லாம் முடிந்தாக வேண்டும். அல்லது என் வாழ்வே முடிந்துவிடும். நான் என் சகோதரர்களை உயிரோடுகொண்டு வந்து ஒப்படைப்பதாக அப்பாவுக்கு வாக்களித்திருக்கிறேன். அப்படி முடியாவிட்டால் அந்த முயற்சியிலேயே என்னை நான் அழித்துக் கொள்ளுவேன்.''

கீர்த்தியின் பேச்சைக் கேட்ட குந்தளவல்லியின் உடல் நடுங்கியது. அவளால் பேசவே முடியவில்லை. கீர்த்திதான் பேசினான்.

''அக்கினி அரக்கனைச் சந்திக்க நான் முதலில் போயிருந்தேனானால், அதில் நான் மடிய நேரிட்டிருக்குமானால், என்னை அடுத்து என் தம்பிகளை அப்பா அந்தக் காரியத்துக்கு அனுப்பியே இருக்க மாட்டார். அதே மாதிரி உன்னைச் சந்திப்பதற்கு முன்பாக நான் அந்தக் கொடிய மிருகத்தைச் சந்தித்திருப்பேனானால் அதை என்னால் கொன்றிருக்கவும் முடியாது.''

''அக்கினி அரக்கனை நீங்கள் வெற்றி கொள்வதற்கு அப்படி நான் என்ன செய்து விட்டேனாம்?'' என்றாள் குந்தளா.

''உன்னைக் காண்பதற்கு முன்னால் எனக்கு மந்திர மாயங்களில் நம்பிக்கையே இல்லையே! கணிதம், ரசாயனம், நிலநூல், வானியல், உடல் நூல், மண் இயல் என்று இப்படி ஏதேதோ அறிவியல் விஷயங்களில் ஆழ்ந்து போயிருந்தேன். அப்படி அந்த நிலையில் நான் அக்கினி அரக்கனின் முன்னிலையில் போயிருந்தால் என்னைத் தன் ஒரு கவள உணவாக்கிக் கொண்டிருக்கும் அது. உன்னைக் கண்ட பிறகுதான் எனக்கு வாழ்க்கையிலேயே புதிய உற்சாகமும் ஒரு பிடிப்பும் ஏற்பட்டது. வெறும் படிப்பைத் தவிர உலகில் உன்னைப்போல வேறு பல உருப்படியான விஷயங்களும் இருக்கின்றன என்பதை அறிந்தேன். உன் சிரிப்பும் பார்வையும்தான் அந்தக் கொடிய மிருகத்தை எப்படியும் கொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தை என்னுள் வளர்த்து விட்டன.''

குந்தளவல்லிக்குக் கீர்த்தியின் ஒவ்வொரு வார்த்தையும் பெருமையாகவும் பூரிப்பாகவும் இருந்தது. அவள் உள்ளத்து மகிழ்ச்சியை அவளது பளபளக்கும் கண்கள் மூலம் கண்டான் கீர்த்தி.





குந்தளவல்லியின் இதயத்தை அத்தனை ஆனந்தத்துக்கும் ஊடாக ஒரு கவலையும் கடித்துக் கொண்டிருந்தது.

அக்கினி அரக்கனைக் கீர்த்தி வெற்றி கொண்டது அவனுடைய அறிவாற்றலுக்கு எடுத்துக் காட்டு. பனி அரக்கனையும் அதையும் மோத விட்டு இரண்டையும் ஒருசேர அழித்த அவன் சாகஸத்தை எத்தனை பாராட்டினாலும் போதாது. ஆனால் இப்போது அவன் மேற்கொண்டிருப்பது கருகிச் சாம்பலான அவன் சகோதரர்களை உயிரோடு கொண்டு வருவதல்லவா? இது எப்படிச் சாத்தியமாகும்? இதை நிறைவேற்றாவிடில்? ஐயோ, என் கீர்த்தியை நான் இழந்துவிடுவேனா?'' குந்தளாவின் கண்கள் குளமாயின. ஆனால் கீர்த்தி குன்றாத அதே குதூகலத்துடன் அவள் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினான். அது அவளுக்கு எத்தனையோ இதமாக இருந்தாலும் உள்ளத்தின் கனம் மட்டும் குறையவில்லை.

அன்றிரவு மங்களகிரியிலேயே தங்கினான் கீர்த்தி. மறுநாள் அதிகாலையில் அரண்மனையில் எவரும் எழுந்திருக்கும் முன்பாக எழுந்திருந்து மந்திரக் கம்பளத்தை விரித்து அதில் அமர்ந்து கொண்டான். குந்தளவல்லியிடம் மானசீகமாக விடை பெற்றுக் கொண்டான். கம்பளம் வானத்திலே மிதந்து பறந்தது விசித்திரபுரியின் பழைய அரண்மனையை நோக்கி. மன்னர் மந்தஹாஸர் தமது தலைநகரை மாற்றிக் கொண்ட பிறகு அந்தப் பழைய அரண்மனை பாழடைந்து கிடந்தது. அங்கு யாருமே இல்லை. யாருமற்ற அதன் நிசப்தமான நிலையே மிக பயங்கரமாக இருந்தது. அரண்மனையின் நிலா முற்றத்தில் நின்றபடி 'ஹோ'வென்று வெறிச்சோடிக் கிடக்கும் அந்தப் பழங்கால அரண்மனையை ஒரு முறை பார்த்தான் கீர்த்தி. ஏதாவது ஒரு ஜீவன் அங்கு தென்படாதா வென்று. கிழட்டுக் குதிரை, மாடு, காளை இப்படி ஏதாவது.... ம்ஹூம்... ஈ காக்கைகூட இல்லையே' என்று ஏக்கத்தோடு பெருமூச்சு விடும் வேளையில் 'மியாவ்' என்று மெல்லிய ஓசை கேட்டது. ஒரு கிழட்டுப் பூனை. நோயால் மெலிந்து போன ஜீவன் அதற்குக் கண்கூடச் சரியாகத் தெரியவில்லை. உடலின் ரோமங்கள் ஆங்காங்கே உதிர்ந்து விகாரமான தோற்றம். எலியையோ பறவையையோ பிடிக்கும் வலிமை இழந்த நிலையில் எப்படியோ எதையோ உண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் அதைக் கண்ட கீர்த்திக்கு வேதனையாக இருந்தது. யாருமற்ற இந்தப் பாழடைந்த அரண்மனையில் இது இன்னும் அதிகநாள் உயிர் வாழ முடியாது. பசியினாலும் நோயினாலும் வருந்திச் சாவதை விட, இதை இப்போதே நிம்மதியாக அமைதி பெறச் செய்வோம் என்று தன் உடையிலிருந்த வாளை உருவினான். அடுத்த விநாடி அதன் ஒரே வீச்சில் பூனையின் மூச்சு அடங்கிற்று. ஆதரவற்ற ஒரு ஜீவன் அல்லல்படக் கூடாதென்ற நல்லெண்ணத்தினால்தான் கீர்த்தி அதைக் கொன்றான்.

பாழடைந்த அரண்மனையில் சிதறிக் கிடந்த மரம், கட்டை, சுள்ளிகளைக் குவித்துத் தீமூட்டி அதில் அந்தப் பூனையின் உடலை வைத்துத் தகனம் செய்தான். கொஞ்ச நேரத்தில் பூனையின் உடல் சாம்பலாகியது.

கீர்த்தி வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகையின் உச்சியில் உள்ள மந்திரப் பொருள்கள் நிறைந்த அறையை நோக்கிப் போனான். விரிசல் விழுந்த கதவிடுக்கின் வழியாகக் காலைக் கதிரவனின் பொற் கிரணங்கள் அவ்வறையினுள்ளே புகுந்து அங்கு குவிக்கப்பட்டிருந்த மந்திரப் பொருள்களின் மீது விழுந்து விளையாடிக் கொண்டிருந்தது. கீர்த்தி அந்த விநோதப் பொருள்களைப் புரட்டிப் புரட்டி எதையோ தேடினான். அவன் முயற்சி வீண்போகவில்லை. சீன தேசத்துப் பாசி வண்ண 'ஜேடு' என்ற கல்லினால் செய்யப்பட்டிருந்த ஒரு சிறு குடுவையைக் கையில் எடுத்தான். அதன் தோற்றமே விநோதமாக இருந்தது. அதன் கழுத்தில் ஒரு சுருக்குப் பை தொங்கியது. அதைப் பார்த்தபோது அதனுள் ஒரு ஓலைச் சுருள் இருந்தது. அதில் '**ஜீவநீர் ஊற்றின் உயிரளிக்கும் தண்ணீர்**' என்று எழுதி அதன் தன்மைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தது.

''இது இங்கு இருக்கும் என்று நான் எண்ணியது பொய்க்கவில்லை. என் தம்பிகளை உயிரோடு மீட்டுவிடலாம்'' என்று கீர்த்தி தனக்குத் தானே சொல்லிக் கொண்டே அந்தக் குடுவையுடன் அரண்மனை நிலா முற்றத்துக்கு ஓடிவந்தான்.

சற்று முன்பு நோய்வாய்ப்பட்ட கிழட்டுப் பூனைக்குத் தகனக் கிரியை நடத்திய இடத்தை நோக்கி நடந்தான். தீ எரிந்து தணிந்து சாம்பல் மூடிக் கிடந்தது. குடுவையிலிருந்த ஜீவநீரைச் சில துளிகள் அந்தச் சாம்பல் மீது தெளித்தான். அடுத்த விநாடி அவிந்திருந்த அதிலிருந்து குபீரென்று சிகப்பும் பச்சையுமான தீச்சுடர் நெளிந்தபடி தனது ஒளி நாக்கை நீட்டிச் சப்புக் கொட்டுவது போல் உயர்ந்தது. அத்துடன் புகையும் மூண்டது. சற்றைக்கெல்லாம் புகை நடுவிலிருந்து அழகான கொழு கொழு பூனைக் குட்டியொன்று 'மியாவ்' என்று இனிய குரல் எழுப்பியபடி வெளியே வந்தது. எந்தக் கிழட்டுப் பூனையை அது துன்பப் படுவதிலிருந்து அதற்கு விடுதலையளித்தானோ கீர்த்தி, அதே பூனை அதன் இளமையில் எப்படி இருக்குமோ அப்படி அந்தச் சாம்பல் மூட்டத்திலிருந்து உயிர் பெற்று வந்தது. கீர்த்தி சிறுவனாக இருந்தபொழுது அந்த அழகுப் பூனையுடன் ஓடி விளையாடியிருக்கிறான். அது இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்தது. உயிர் பெற்ற அந்தப் பூனையும் இளவரசனை இனம் கண்டுகொண்டு தன் வாலை உயர்த்தித் தலையை நிமிர்த்தி வாஞ்சையோடு 'மியாவ்' என்று பேசிற்று. கீர்த்தி அதை வாரி அணைத்துக் கொண்டு அதன் பட்டு உடலைத் தடவிக்கொடுத்து மகிழ்ந்தான்.

''சாம்பலான பூனையை இந்த ஜீவ ஊற்றின் மந்திர நீரினால் மறுபடியும் இளமையோடு உயிர்ப்பிக்க முடியும் போது அக்கினி அரக்கனால் எரிக்கப் பட்ட என் தம்பிகளை ஏன் உயிர்ப்பிக்க முடியாது?'' இப்படிக் கேட்டுக் கொண்டே கிளம்புவதற்குத் தயாராகி விட்டான் கீர்த்தி. எங்கே? அக்கினி அரக்கனின் இருப்பிடத்துக்குத்தான்!

நினைத்ததைக் கொடுக்கும் மந்திரக் கோலை உயர்த்திச் சுவையான உணவுப் பொருள்களை வரவழைத்துப் பக்குவமாக அதைக் கட்டி எடுத்துக்கொண்டான் வழித் துணைக்கு. மந்திரக் கம்பளத்தில், ஜீவ நீர் ஊற்று மந்திர நீருள்ள குடுவையுடன் அமர்ந்து கொண்டு, அக்கினி அரக்கன் பஸ்மமாகியுள்ள இடத்துக்குப் போகும்படி கம்பளத்துக்குக் கட்டளையிட்டான்.

மந்திரக் கம்பளம் வானத்திலே மிதந்தபடி பறந்து கொண்டிருக்கும் போது கீர்த்திக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அக்கினி அரக்கனைக் கொல்ல எத்தனையோ ராஜகுமாரர்கள் எத்தனையோ ஆண்டுகளாக வந்து முயன்று சாம்பலாகியிருப்பார்கள். அங்குள்ள சாம்பல் குவியல்களில் இன்பவண்ணனுடையதும் மோகனரங்கனுடையதும் எது என்று எப்படிக் கண்டுபிடிப்பது?' ஒரு விநாடிதான் இந்தக் குழப்பம் இருந்தது கீர்த்திக்கு. உடனே அதைச் சமாளிக்கும் மார்க்கம் அவனுக்குப் புலனாகி விட்டது. அவன் எல்லாரையும் போல் சாதாரண அறிவாளியா? இல்லையே!

'மந்திரக் கம்பளத்துக்குக் கட்டளையிட்டால் அது இன்பவண்ணனுடைய சாம்பல் குவியல் அருகே கொண்டு போய் இறக்கி விடுகிறது! மனிதர்களால் முடியாத காரியத்தை மந்திரக் கம்பளம்சுலபமாகநிறைவேற்றிவிடுமே!' அதன்படியே கட்டளையிட்டான் கம்பளத்துக்கு. அதுவும் 'விர்' என்று அக்கினி அரக்கனின் சுடுகாட்டுப் பகுதியில் ஒரு 'கிர்' அடித்துப் பறந்தபடி ஓர்



லண்டன் போலீஸ்காரர்கள் சமூக நலனுக்கு எப்படியெல்லாம் உதவி உழைக்கிறார்கள் என்பதற்கு இதோ இந்தக் காட்சியே ஓர் உதாரணம். பள்ளி விடுமுறை நாட்களில் குழந்தைகள் வீட்டுக்குள்ளேயா உட்கார்ந்திருப்பார்கள்? ஓடியாடி விளையாட மாட்டார்களா? அப்போது அவர்கள் சாலைகளில் வந்து போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவிக்காமலும் விபத்து நேராமலும் தடுக்கப் போலீஸ்காரர்கள் குழந்தைகளை விளையாட்டுப் பூங்காக்களுக்கு அழைத்துப் போய் அவர்கள் அங்கு மட்டுமே விளையாடுவதற்குத் தாங்களும் உதவுகிறார்கள். இதோ பாருங்கள், இரண்டு இளம் போலீஸ்காரர்கள் மூன்று குழந்தைகளுக்கு உற்சாகமாக ஸ்கிப்பிங் கயிறு சுழற்றி உதவுகிறார்கள். இதனால் குழந்தைகளோடு அவர்கள் எப்படிப் பழக வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. படமும் தகவலும்: பிரிட்டிஷ் செய்தித்துறை

இடத்தில் போய் இறங்கியது. கீர்த்தி குடுவையுடன் கவனமாகச் சாம்பல் குவியலை உற்றுப் பார்த்தான். பிறகு கிளறினான். பளீரென்று ஓர் உடைவாள் சாம்பல்களிடையே மின்னியது. நவரத்தினக் கற்கள் வைத்து இழைக்கப்பட்ட அதன் கைபிடியைக் கண்டதுமே அது இன்பவண்ணனுடையது தான் என்பது தெரிந்து விட்டது. குடுவையிலிருந்து சில துளி ஜீவ நீரை எடுத்து அந்தச் சாம்பல் குவியலின் மீது தெளித்தான். அடுத்த விநாடி நெருப்பும் புகையும் சீறிக்கொண்டு கிளம்பின. அதன் நடுவிலிருந்து ஒரு கையில் உயர்த்திய உடைவாளுடனும் கையால் கண்களைக் கசக்கிக்கொண்டேயும் துள்ளி எழுந்து ஓடி வந்தான் இளவரசன் இன்பவண்ணன்.

''அண்ணா! நீங்களும் அக்கினி அரக்கனைத் தேடித்தான் வந்திருக்கிறீர்களா? நான் கொஞ்சம் கண் அயர்ந்து விட்டேன். அதில் கனவு வேறு. அந்தப் பொல்லாத மிருகம் என்னை அடித்து வீழ்த்துவது போல! நல்லவேளை விழித்துக்கொண்டேன். நீயும் வந்திருக்கிறாயே. நாம் இருவரும் சேர்ந்து அதை யமனுலகுக்கு அனுப்புவோம். அது சரி ஊரில் மஞ்சுளா எப்படி இருக்கிறாள்?'' என்று மடமடவென்று பேசிக்கொண்டே போனான்.

''மஞ்சுளா முன்னை விட அழகாக இருக்கிறாள். உன்னை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறாள். அக்கினி அரக்கனைக் கொன்றாகி விட்டது. ஆகவே நீ அதைப் பற்றிக் கவலைப் படாதே. தம்பி, மோகனரங்கனை இங்கு எங்கோ இருக்கச் சொன்னேன். தேடி அழைத்து வரும்வரை நீ சற்று இங்கேயே அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிரு'' என்றான் கீர்த்தி. அவனும் மோகனும் அக்கினி அரக்கனால் சாம்பலானதை அவனிடம் தெரிவிக்கக் கீர்த்திவர்மன் விரும்பவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

நாகர்கள்

குடியரசு தின விழாவைப் பார்ப்பதற்காக ஒரு வாரம் முந்தியே குழந்தைகளுடன் டில்லிக்குப் போயிருந்தேன்.

விழாவில் பங்குகொள்ள நாடெங்கிலுமிருந்தும் பழங்குடிகளைச் சேர்ந்த கிராமிய நடனக்காரர்கள் வந்திருந்தார்கள். இவர்களது முகாமைப் பார்க்கச் சென்ற என்னுடன் கண்ணனும் கீதாவும் ஒட்டிக்கொண்டு விட்டனர்.

முகாமை அடைந்தபோது பலவிதமான ஒலிகள் எழும்புவதைக் கேட்டோம். பலவிதமான உடைகளையும் அணிகளையும் அணிந்து கொண்டிருந்த கிராமிய நடனக்காரர்கள் ஒய்யாரத்துடன் ஆடிக் கொண்டிருந்தார்கள்.



ஒவ்வொரு கூடாரமாகப் பார்த்துக் கொண்டே போனோம். கூடாரத்தில் இருந்த பூர்வ குடியினரைப் பற்றிக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொண்டே போனேன்.

''ஐயோ!'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

அலறியவள் கீதா. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எதிர்ப்புறம் பார்த்தவுடன்தான் காரணம் தெரிந்தது. ஈட்டியைப் பிடித்துக் கொண்டு நாகர் இனத்தைச் சேர்ந்த ஒருவன் நின்று கொண்டிருந்தான். இதைப் பார்த்துத்தான் கீதா கத்தியிருக்கிறாள். என்னையும் மீறிச் சிரிப்பு வந்து விட்டது. உடனே கீதாவின் பயத்தைப் போக்க நாகரிடமிருந்து ஈட்டியை வாங்கிக் குழந்தைகளுக்குக் காட்டினேன். தொட்டுப் பார்த்து இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துக் குழந்தைகள் புரட்டினார்கள். கீதாவின் பயம் போய்விட்டது என்பதைத் தெரிந்து கொண்டேன். பிறகு நாகர்கள் நாகாலாந்தில் வசிப்பது பற்றியும் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறினேன்.

''நீங்க நாகாலாந்து போய்த் திரும்பி வந்தப்ப நாகர்களெல்லாம் ரத்த வெறி பிடித்தவங்கன்னு சொன்னீர்களே. இவனைப் பார்த்தா அப்படித் தெரியலையே! எங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறானே!'' என்றான் கண்ணன்.

''கொஞ்சம் பொறு. முதலில் நாகர்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர்கள் மிகவும் உறுதி மிக்கவர்கள். வியாதிகளும் இவர்களை நெருங்கப் பயப்படும். ஈட்டிதான் இவர்களது இணைபிரியாத தோழனாகும். துஷ்ட மிருகமோ அல்லது பகைவர்களோ இவர்களைத் தாக்கினால் ஈட்டியைப் பயன்படுத்தித் தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். 'கொன்னாப் பாவம் தின்னாப் போச்சு'ன்னு வேடிக்கையாச் சொல்வார்களே அந்த மாதிரி முன்பெல்லாம் எதிரிகளைக் கொன்ற பின்பு நாகர்கள் சாப்பிட்டு விடுவார்களாம். அப்படி இப்போ நாகர்கள் மனித மாமிசம் உண்பதாகத் தெரியவில்லை!'' என்றேன்.

''நாகர்கள் எங்கே வசிக்கிறார்கள்?'' என்று கேட்டாள் கீதா.



''தமிழ்நாடு, ஆந்திரா போல் நாகாலாந்து என ஒரு ராஜ்யம் இருக்கிறது. அந்த ராஜ்யத்தில்தான் நாகர்கள் வசிக்கிறார்கள். சில நாகர்கள் அஸ்ஸாமிலும், நேஃபாவிலும், அண்டை நாடான பர்மாவிலும் இருக்கிறார்கள். நாகர்களில் பலவகைப் பிரிவினர்கள் உண்டு. அங்கமி, நாகா, சீமா, ஆவ், அங்குல், லகோரா என்ற பல பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவும் சற்றே மாறுபட்ட மொழியைப் பேசுகின்றது.

''நாகர்கள் என்று எப்படிப் பெயர் வந்தது? நாகம் என்றால் பாம்பு. அப்படியென்றால் நாகர்கள் பாம்பாட்டிகளா?'' என்றான் கண்ணன். தனது அறிவை வெளிக்காட்டிக் கொண்டதில் அவனுக்குப் பரம சந்தோஷம்.

''இல்லை. நாகர்களுக்கும் பாம்புகளுக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை. நாகா என்பது 'நாக்' என்ற சம்ஸ்கிருத வார்த்தையிலிருந்து வந்ததாகும். அர்த்தம் மலை.'' இவ்வாறு நான் விளக்கினேன்.

''அப்புறம்?'' என்றாள் கீதா.

''அப்புறம் என்ன? நாகர்களுக்கு வேட்டை ஆடுவதில் பிரியம் அதிகம். ஆனால் தங்களது கிராமத்தின் எல்லைக்குள்ளாகவே நாகர்கள் வேட்டையாடுகின்றனர். அப்படி மீறி வேறொரு கிராமத்தின் எல்லைக்குள் வேட்டையாட நேரிட்டால் வேட்டையாடிய மிருகத்தை அந்தக் கிராம மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.''

''நாகர்களுக்கு மாமிசம்தான் பிடிக்கும்போலிருக்கே'' என்றான் கண்ணன், முகத்தைச் சுளித்துக் கொண்டே.

''ஆமாம். பூனையின் மாமிசத்தைத் தவிர எல்லா மாமிசத்தையும் நாகர்கள் விருப்பத்துடன் உண்கின்றனர். இது தவிர, மீன், அரிசி போன்றவற்றையும் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். கறிகாய்களைக் கண்டால் மட்டும் நாகர்கள் முகத்தைத் திருப்பிக்கொள்வார்கள்'' எனக் கூறிக் கொண்டே கீதாவின் பக்கம் திரும்பினேன்.

''சாப்பாட்டு விஷயம் இருக்கட்டும். நாகர்களின் குழந்தைகளைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே!'' என்றாள் கீதா.

''அதுவா, சொல்கிறேன். நாகர்கள் குறிப்பாக, ஆவ் நாகர்கள் தங்களது குழந்தைகள் மீது உயிரையே வைத்திருக்கிறார்கள். குழந்தையில்லாதவர்கள் துரதிருஷ்டசாலிகள் என்று நாகர்கள் கருதுகின்றனர். மற்றவர்களைப் போலவே நாகர்களுக்கும் ஆண் குழந்தைகளை அதிகம் பிடிக்கிறது. நாகர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்க நமது அரசாங்கம் முயன்று வருகிறது. நாகர்கள் படித்துவிட்டு ஆபீஸில் கூட வேலை செய்கிறார்கள். இருந்தாலும் பெரும்பாலான நாகர்கள் மூட நம்பிக்கை தனை இன்னும் கைவிடவில்லை.''

''மூட நம்பிக்கைன்னு என்னப்பா?'' என்றாள் கீதா.

''அப்படீன்னு சில கொள்கைகளைக் கண்மூடித்தனமா



கப் பின்பற்றுவது. உதாரணமாக, 'அருனுங்' என்ற ஒரு கல்லை வணங்கினால் நினைத்தது நடக்கும் என நாகர்கள் நினைக்கின்றனர். ஆனால் அந்தக் கல்லை இதுவரையில் யாரும் பார்த்ததில்லை. 'செமாங்' என்ற கடவுளைக் குபேரக் கடவுள் என்று நாகர்கள் வணங்குகிறார்கள். இது தவிர ''ரூபியாவ்'' ''ரங்கவா'' என்ற இரு தெய்வங்களும் உண்டு. இறந்தவர்களையும் நாகர்கள் தெய்வமாகத் தொழுகிறார்கள்.

நான் கூறி முடித்தவுடன் என் மனைவி வந்து, ''நாகர் பெண்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே!'' என்றாள்.

''நாகர் பெண்கள் உன்னைப் போல் இல்லை. மிகவும் கஷ்டப்பட்டு உழைப்பவர்களாகும். வயலில் வேலை செய்வது காடுகளிலிருந்து மரங்கள் வெட்டி வருவது, நெல்லைக் குத்தி அரிசியாக்குவது முதலிய எல்லா வேலைகளையும் இவர்களே செய்கிறார்கள். மேலும் குடும்பத்தினருக்கு வேண்டிய எல்லா ஆடைகளையும் நாகர் பெண்களே நெய்து தருகிறார்கள்.''

இதைக் கேட்ட மனைவியின் முகத்தில் கோபக் குறி தென்பட்டது. ஆதலால் மெதுவாக என் அறைக்குள் கம்பி நீட்டி விட்டேன்.

நெருப்போடு விளையாட்டு!

61 வயதுள்ள கோட்லீப் இலெங் என்பவர் தீக்குச்சிகளினாலேயே கோலோன் மாதாகோவிலை உருவாக்கி இருக்கிறார். இதற்கு 25 லட்சம் தீக்குச்சிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவாம். (யு.பி.ஐ.)



தெரிந்துக்கோ

ஒளி என்றால் என்ன?

நாம் வாழும் இந்த உலகில் உள்ள பல மர்மங்களுள் ஒன்று ஒளி. எவ்வளவோ விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இன்றுகூட வெளிச்சம் என்பது என்ன என்று திட்டவட்டமாக விளக்க முடியாது. அதன் செயலிலிருந்துதான் அது என்ன என்று கூற முடிகிறது. வெளிச்சம் என்பது ஒரு வகை சக்தி என்று நாம் அறிவோம். உஷ்ணம், மின் அலைகள், எக்ஸ்ரே கதிர்களைப் போல ஒளியும் ஒரு வகைச் சக்தி. ஒளி அலைகளின் இடைவெளி, வேகம் இவைகளைக் கணக்கிடலாம். மற்ற சக்திகளுக்குள்ள குணங்களைப் போலவே இதன் குணங்களும் இருக்கின்றன.

ஒளியின் வேகம் தெரியுமா? விநாடிக்கு 186,000 மைல்கள் செல்லக் கூடியது ஒளி. அதாவது ஓர் ஒளிக்கற்றை ஓர் ஆண்டில் 5880,000,000,000 மைல்கள் பிரயாணம் செய்யும் வல்லமை பெற்றது. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் (அஸ்ட்ரானமர்ஸ்) இந்தத் தூரத்தை ஓர் ஒளி ஆண்டு (Light year) என்கிறார்கள். விண்வெளியை அளப்பதற்கு இதை ஓர் அளவாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஒளி என்றால் என்ன, அது எப்படிப் பிரயாணம் செய்கிறது என்ற ஆராய்ச்சியில் பல முடிவுகள் தோன்றியுள்ளன. பதினேழாம் நூற்றாண்டில் சர் ஐஸக் நியூட்டன் என்ற விஞ்ஞானி ஒளி என்பது கார்ப்பஸல்ஸ் (Corpuscles) களால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

அதாவது ஒளி பிறக்கும் இடத்திலிருந்து நுண்ணிய வெடிகள் வெடிப்பதினால் ஒளி பரவுகிறது என்றார். ஒளியின் பல்வேறு குணங்களுக்கு இந்த சித்தாந்தம் ஒத்துவரவில்லை. இதே காலத்தில் கிறிஸ்டியன் ஹைஜன்ஸ் என்பவர் ஒளி என்பது அலை அலையாகப் பரவுகிறது என்றார். ஒளி சிந்தும் பொருள்களிலிருந்து வெளிச்சம் நாடித் துடிப்பைப் போல் அலை அலையாக வெளிப்படுவதாகக் கூறினார். சலனமற்ற நீரில் ஒரு கல்லைப் போட்டால் ஏற்படும் வட்ட அலை அதிர்வுகளைப் போல.

விஞ்ஞானிகள் இன்று ஒளி என்பது அலைகளாகவும் சிறு துகள்களாகவும் இயங்குகிறது என்று நம்புகிறார்கள். இரண்டுமே சரி என்பதைச் சோதனைகள் மூலம் நிரூபணமாக்கியுள்ளனர். ஆகவே, 'ஒளி என்பது என்ன?' என்று நம்மால் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

யாரோ...என்ன பேரோ?

ஸ்வஸ்திகா



மாமா
ஹேமா
லல்லி
பாஸ்கர்

மாமா: பாஸ்கர்! இங்கே வா! நான் இப்ப ஒரு சின்னப் பையனைப் பற்றி ஒரு கதை சொல்கிறேன். அந்தப் பையன் யாருன்னு உன்னால் கண்டு பிடிக்க முடிகிறதான்னு பார்க்கப் போகிறேன். லல்லி, ஹேமா நீங்களும் வந்து இப்படி உட்காருங்க!

லல்லி, ஹேமா: இதோ வந்துவிட்டோம்!

மாமா: அந்தப் பையனுக்கு அப்ப பதினைந்து வயதுதான். அவனை, இந்தியாவிலிருந்து மேல் படிப்புப் படிக்க அவ அப்பா இங்கிலாந்துக்கு அனுப்பறதுன்னு தீர்மானிச்சுட்டாரு. உடனே இங்கிலாந்துக்குக் கிளம்பிட்டார் அவர்.

பாஸ்கர்: என்ன மாமா? பதினெஞ்சு வயசுப் பையனைத் தனியா இங்கிலாந்துலே விட்டுட்டு வந்துட்டா...?

ஹேமா: அவன் தைரியமா அங்கேயிருந்துண்டு படிக்க வேண்டியதுதான்!

மாமா: இங்கிலாந்திலே 'ஹாரோ' என்கிற பள்ளிக்கூடத்திலே அந்தப் பையனைச் சேர்த்திட்டு - அவர்கள் கிளம்பி விட்டார்கள்.

லல்லி: அந்தச் சின்னப் பையன் எப்படி அங்கே தனியாக இருக்கச் சம்மதித்தான்?


மாமா: ஆரம்பத்திலே கொஞ்சம் பயம் இருந்தது அவனுக்கு. ஆனா, இங்கிலாந்தைப் பற்றி நிறையப் புத்தகங்களை அவன் இந்தியாவிலிருந்தப்பவே படிச்சிருக்கான். தவிர, இங்கிலீஷ்காரர்களைப் பற்றியும், அவர்கள் பழகுகிறவிதமும் அவனுக்குப் புத்தகத்திலே படிச்சே நிறைய தெரிந்திருந்தது. அவர்கள் செய்யுகிற டிரஸ் மாதிரியே இந்தச் சின்னப் பையனிடமும் டிரஸ் இருந்தது. இங்கிலீஷ் நல்லாப் பேசினான். பையன் பார்ப்பதற்கு ராஜகுமாரன் மாதிரி இருக்கவே, சீக்கிரம் சிநேகிதர்கள் இவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

லல்லி: அங்கே இந்தியாவிலிருந்து வேற யாராவது பையன்கள் படிக்க வந்திருந்தார்களோ?

மாமா: ஓ...! இருந்தாலும் இந்தப் பையனை அந்த வெள்ளைக்காரப் பையன்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு!

பாஸ்: மாமா! யார் இந்தப் பையன்?

மாமா: இப்ப சொல்லமாட்டேன்... இந்தக் கதை முடியும் போது நீங்கள் யாராவது கரெக்டா சொல்லுங்க, உங்களுக்கு ஒரு பரிசு தருவேன்.



ஹேமா: எனக்குத் தெரியும், ஆனா இப்ப நான் சொல்லமாட்டேன்.

மாமா: இந்தப் பையன் ரொம்ப நல்லா கிரிக்கெட் விளையாடுவான். அதனாலும் அவனை எல்லோருக்கும் பிடிச்சுப் போச்சு. இருந்தாலும் தன் நண்பர்களிடமெல்லாம் என்ன சொல்லுவான் தெரியுமா? 'நீங்கள் என்னை விரும்புவது போலவே மற்றப் பையன்களிடமும் அன்பாக நடந்து கொள்ள வேணும். ஒருத்தரை ஒருத்தர் வெறுக்கவே கூடாது. எந்த நாட்டிலிருந்து படிக்க வந்திருந்தாலும் அவர்களுடன் சிநேகிதமாகத்தான் இருக்கணும்' என்பான்.

லல்லி: ரொம்ப நல்ல பையன்போல் இருக்கே?

மாமா: இந்தப் பையனுக்குப் பிடிக்காதது என்ன தெரியுமா?

பாஸ்: அந்த ஊர் சாப்பாடுதானே!

மாமா (சிரித்தபடி): போடா, சாப்பாட்டு ராமா! அவனுக்குப் பிடிக்காதது லத்தீன் பாஷை கற்றுக்கிற விஷயம்! அவனுக்கு அது புரியவே இல்லே, அதனுலே அப்படி வெறுப்பு!

ஹேமா: பாஸ்கர், உனக்குப் பூகோளம் எப்படியோ அப்படி அவனுக்கு லத்தீன் பாஷை! (சிரிப்பு)

மாமா: 'இந்தியாவில் இருக்கிற அவன் அப்பாவுக்குக் கடிதம் எழுதும் போது எல்லாம் 'வெள்ளைக்காரப் பையன்களுக்கு இருபத்து நாலு மணி நேரமும் விளையாட்டுத்தான்...பாடம் படிக்கவே வணங்குவதில்லை. ஆனல் நான் ரெண்டையும் கவனமாகச் செய்து வரேன்'னு எழுதி வந்தான். அவன் அப்பாவுக்கு ரொம்ப சந்தோஷம்.


லல்லி: சின்னப் பையன் எப்படித் தான் அந்தப் புது ஊரிலே இவ்வளவு தைரியமாயிருந்தானே? ஆச்சரியமா இருக்கு இல்லையா.... ஹேமா?

மாமா: இங்கிலாந்திலே அப்ப தேர்தல் சமயம். போட்டி போட்டு ஜயித்திருந்த புதிய கட்சியைப் பற்றி என்ன தெரியும்னு உபாத்தியாயர் மாணவர்களிடம் கேட்ட போது, ஒரு வெள்ளைக்காரப் பையனுவது எழுந்து பதில் சொல்லவில்லை. நம் இந்தியச் சிறுவன் ஆங்கிலத்திலேயே பொழிந்து தள்ளி விட்டான், பதவிக்கு வர இருந்த புதியகட்சியைப் பற்றி. வகுப்பு வாத்தியார் வாய் கொள்ளாமல் இந்த இந்தியச் சிறுவனைப் புகழ்ந்ததைக் கண்டு மற்றப் பையன்கள் பிரமித்துப் போனுர்கள்.

பாஸ்: நிஜமாகவா...? அந்தப் பையனுக்கு அதெல்லாம் கூடத் தெரியுமா? யார் மாமா இந்தப் பையன்? சொல்லுங்களேன், சீக்கிரம்!

மாமா: அந்த ஊர் ரொம்ப அழகாயிருந்ததாலே அவனுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. சுத்தமாயிருந்தது. ராத்திரி ஏழு மணிக்கப்புறம்கூட சில





நாட்களிலே சூரியன் அஸ்தமிக்காமல் இருந்தது. எங்கே பார்த்தாலும் பூந்தோட்டம், அழகான கட்டடங்கள், ஆற்றங்கரை எல்லாம் பார்க்க ரொம்ப நல்லா இருந்தது. லண்டன் தெருக்களிலே சைக்கிள் ஓட்டறதுன்னு இந்தப் பையனுக்கு ரொம்ப ஆசை.

பாஸ், லல்லி: ஹேமா! உனக்குத் தெரிஞ்சுப் போச்சுன்னியே, சொல்லு சீக்கிரம்.... யார் இந்தப் பையன்?

மாமா: சும்மா இரு ஹேமா. சொல்லாதே! கவனி பாஸ்கர்! சரித்திர பாடம் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். உலகச் சரித்திரத்தையே கரைச்சுக் குடிக்கணும்னு அவனுக்கு ஓர் ஆசை... இந்தியா சுதந்திரம் பெறணும். தானும் வந்து இந்தியச் சுதந்திரப் போராட்டத்திலே கலந்துக்கணும்னு அவனுக்கு ரொம்ப ஆசை. படிப்புக்காக அவ்வளவு பணம் செலவழித்திருக்கும் போது அதை முடிக்காமல் இந்தியா திரும்புவது சரியா?

லல்லி: ஆ.... இப்ப எனக்குத் தெரிந்து போச்சு, இந்தப் பையன் யாருன்னு......

மாமா: சும்மா இரு லல்லி. பாஸ்கர் சரியாகச் சொல்றுனன்னு பார்க்கலாம். ஹாரோ, பள்ளிப் படிப்பை முடிச்சுட்டுக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துலே சேர்ந்துட்டான் பையன். அங்கேயும் உலக சரித்திரம் படிக்கவும், பெரிய பெரிய அறிஞர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் படிப்பதிலும்தான் நேரத்தைக் கழித்தான். வர வர லண்டன் பிடிக்கல்லே அவனுக்கு. வெள்ளைக்காரர்களோடும் பழகப் பிடிக்கல்லே. இந்தியாவுக்கு எப்ப வருவோம்னு ஆயிடுத்து'

ஹேமா: ஆமாம்.... எத்தனை வருஷம் அங்கே தனியா இருக்க முடியும் அவனுல்? சின்னப் பையன் இப்ப கொஞ்சம் பெரியவனுயிருப்பான், இல்லையா?

சைத்தானின் வலை!

ஓர் அராபியனிடத்தில் சாத்தான் வந்து சொன்னான்:

''உன் இறுதிக்காலம் நெருங்கிவிட்டது. ஆனால் நான் விரும்பும் மூன்று காரியங்களில் ஏதாவது ஒன்றை நீ செய்தால் உன்னைச் சாவிலிருந்து காப்பாற்றுகிறேன்.''

''ஏதாவது ஒன்றுதானே? சொல். செய்கிறேன்'' என்றான் அராபியன்.

''உன் வேலைக்காரனைக் கொன்றுவிடு; அல்லது உன் மனைவியை அடித்துத் தள்ளு; இல்லையென்றால் இந்த ஒரு கோப்பை மதுவைக் குடி!''

''பொறு. என் வேலைக்காரனைக் கொல்வது பெரும் பாவம்; அது நடவாது. என் மனைவியை அடிப்பது நினைக்கவும் முடியாத செயல். அந்த மதுவை வேண்டுமானால் கொடு. குடித்து விடுகிறேன்'' என்றான் அராபியன்.

சாத்தான் கொடுத்த மதுவைக் குடித்தான் அராபியன். இதைக் கண்டு ஆட்சேபித்த தன் மனைவியைக் கீழே தள்ளிக் குடி வெறியில் உதைத்தான். இந்தக் கொடுமையைக் காணச் சகியாது தடுக்க வந்த வேலையாளை ஆத்திரத்தில் கொன்றுவிட்டான்.

சாத்தானுக்குப் பரம திருப்தி இப்போது.

ஆதாரம்: பழைய அரபிக் கதை ''பிறை''யில் 'பிலால்'.

மாமா: அவன் அப்பா பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதை அவன் இங்கிலாந்திலிருந்த போது பேப்பரில் படித்தான். அந்தக் கட்டுரையைப் படித்து வெள்ளைக்காரர்கள் தான் சந்தோஷப்பட முடியுமே தவிர, இந்தியர்களுக்கு அது பிடிக்கவே பிடிக்காது. 'அவர்களைத் திருப்திப் படுத்தி நல்லா எழுதியிருக்கிறீர்களே, அப்பா, சபாஷ்!' என்று கேலி செய்து, துணிச்சலாக அப்பாவுக்கே எழுதி விட்டான். உடனே அவனுடைய அப்பாஅனவுக்கு மீறிக் கோபம் கொண்டு, 'நீ இங்கிலாந்திலே படித்தது போதும், வந்துடு' அப்படின்னு கோபமாக எழுதி விட்டார். ஆனா, அவன் உடனே ஓடி வந்திடல்லே. தன் அப்பாவைப் போல் தானும் படிச்சு, பெரிய சட்ட நிபுணன் ஆன அப்புறம்தான் ஊர் திரும்பறது என்று முடிவு செய்துட்டான். அவன் அப்பா கோபம் தணிந்து, 'நீ உன் இஷ்டம் போல் படிப்பு முடிஞ்சு வந்தால் போதும். உனக்கு இஷ்டப் பட்ட தொழிலிலே இறங்கி, சுதந்திர மனிதனாகவே இரு' அப்படின்னு கடிதம் எழுதிட்டார்.

பாஸ்: எனக்கு இந்தப் பையனை ரொம்பப் பிடிச்சிருக்கு மாமா! அவன் பேரு என்ன? சொல்லுங்களேன், சீக்கிரம்?

மாமா: அவன் சிநேகிதர்களோட ஒரு தரம் ஆற்றுக்குக் குளிக்கப் போன போது, தவறிப் போய்த் தண்ணீரில் சுழலில் சிக்கிக் கொண்டு மூழ்கும் நிலைக்கு வந்துட்டான். அவனுக்கு உதவ முடியாமல் அவன் நண்பர்களாலே கூச்சல்தான் போட முடிந்தது. தானே தன்னம்பிக்கையோடு, நிலைமையைச் சமாளித்து நீந்திக் கரை ஏறியதும், அந்தப் பையன்கள் அவனைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு சந்தோஷத்திலே கூத்தாடினார்கள். இது மாதிரி நெருக்கடி சமயத்திலேகூட அவன் பயப்படலே, தான் ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பினதுக்குக் காரணம், தன் தாய்நாட்டுக்குத் தான் செய்ய வேண்டிய ஏதோ ஒரு முக்கிய காரியம் இருக்குன்னு அந்தப் பையன் தீர்மானிச்சுட்டான். ஏழு வருஷங்களுக்கப்புறம் சொந்த ஊருக்குத் திரும்பினான்.

லல்லி: படிப்பை முடிச்சானா?

மாமா: ஓ! சட்டப் படிப்பு முடிச்சுட்டு அப்பாவைப் பார்க்கக் கிளம்பிட்டான். அவன் அப்பாவுக்கும் அவனைப் பார்க்க ரொம்ப ஆசையாயிருந்தது. ஏன் தெரியுமா? அதைச் சொல்லிவிட்டேனானால், பாஸ்கருக்கு அந்தப் பையன் யாருன்னு புரிஞ்சுடும்!


பாஸ் (உற்சாகமாக): சீக்கிரம் சொல்லுங்க.... சீக்கிரம் சொல்லுங்க.

மாமா: ஒரு தடவை அந்தப் பையன் ஆறு ஏழு வயசாயிருக்கும் போது அவன் அப்பாவுக்குத் தெரியாமல் அவருடைய இரண்டு பேனாக்களைத் திருடி விட்டான். விஷயம் தெரிந்ததும் அவன் அப்பா, தன் ஒரே மகனை இரக்கமில்லாமல் கடுமையாக அடித்துவிட்டார்...

பாஸ்: ஓ....! புரிஞ்சுடுத்து. புரிஞ்சுடுத்து! இந்தப் பையன் யாருன்னு எனக்குப் புரிஞ்சிட்டது.... நேருஜி. ரோஜாவின் ராஜா நேரு மாமாதானே? நேருஜியைப் பற்றியா இவ்வளவு நல்ல கதை சொன்னீங்க....? ரொம்பத் தாங்ஸ் மாமா.

'கோகுலத்'தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM

REGISTERED NO. M. 9040



